Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :262 ஆவணி 02 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 18 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## "எங்களுக்கு 2½"

### தேசியப் பட்டியலில் பங்குகேட்கிறது ரெலோ

யாழ்ப்பாணம், ஓக. 18

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த ஒரே யொரு தேசியப் பட்டியல் 15 >

முச்சந்தி முரளி



'இருண்ட ஆட்சியில் இனி இதுகள்தான் அடிக்கடி தேவைப்படும் கண்டியளோ!'

# கூட்டமைப்பு பேச்சாளரை உடனடியாக மாற்றுங்கள்

## சுமந்திரனுக்கு எதிராக பங்காளிக் கட்சிகள் போர்க் கொடி

யாழ்ப்பாணம், ஓக.18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் பதவியை, எம்.ஏ.சுமந்திரனிடமிருந்து மீளப் பெறுமாறு, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள், நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கவுள்ளது என அறியமுடிகின்றது. நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் சுமந்திரன் தெரிவித்த சர்ச்சைக் கருத்துக்களையடுத்து இதே கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், அதனை மீண்டும் வலியுறுத்திச் செயற்படுத்த, அழுத்தம் பிரயோகிப்பதற்கும் பங்காளிக் கட்சிகள் முடிவு செய்துள்ளன. 15 >

## இருண்டது இலங்கை

### பல மணி நேர மின் துண்டிப்பால் மக்கள் பெரும் அசௌகரியம்

கொழும்பு, ஓக.18

கெரவலப்பிட்டிய அனல் மின் நிலையத்தில் நேற்றுத் திடீரென ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறால் நாடாளாவிய ரீதியில் மின் தடை ஏற்பட்டது. 15 >

## காங்கேசன் துறைமுகத்துக்கு விரைவில் காணி சுவீகரிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 18

காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைப்பதற்காக அந்தப் பகுதியிலுள்ள சிமெந்துக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான காணி மற்றும் தனியார் காணிகள் என்பனவற்றை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளனஎனத் தெரியவருகின்றது. காங்கேசன்துறை 15 >




## 'புள்ளி' வைத்த நாமல்

கொழும்பு, ஓக.18

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள நாமல் ராஜபக்ச இன்று தனது அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ள நிலையில், அமைச்சின் 15 >

## மின்சாரம் 'கட்' நோயாளிகள் 'அவுட்'

யாழ்ப்பாணம், ஓக.18

நாடளாவிய ரீதியில் நேற்று மின் தடை ஏற்பட்டிருந்த நிலையில், வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட சில சுதேச ஆயுள்வேத வைத்திய 15 >

## 19இற்கு சாவு மணி அடிப்பது திண்ணம்

### சமல் திட்டவட்டம்

கொழும்பு, ஓக.18

ஜனாதிபதி முறையைப் பலப்படுத்துவதே புதிய அரசின் நோக்கம். அதற்காக 19ஆம் திருத்தத்தை முழுமையாக நீக்கியே தீருவோம் இவ்வாறு அமைச்சர் சமல் ராஜபக்ச 15 >

## வீழ்ச்சிக்குப் பொறுப்பேற்று விலகினார் சத்தியலிங்கம்!

பொதுத்தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை அடுத்து, வவுனியா மாவட்டக் கிளைத் தலைவர் பதவியிலிருந்து முன்னாள் மாகாண அமைச்சர் ப.சத்தியலிங்கம் விலகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் அவர் இந்த முடிவைத்தங்களிடம் கூறியுள்ளார் என்று மாவட்டக்குழுவின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இந்த வீழ்ச்சிக்கு மாவட்டக் குழுத் தலைவர் என்ற அடிப்படையில் பொறுப்பேற்கின்றேன் என்றும் இதற்கான பொறுப்பை அடுத்தவரிடம் சுட்டிக்காட்டாது தானே ஏற்கின்றேன் என்றும் அவர் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## வடக்கு பட்டதாரிகள் 2,346 பேருக்கு ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஓக.18

அரச வேலை வாய்ப்புக்காக உள்ளீர்க்கப்பட்டுள்ள பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல் நேற்று வெளியாகியது. அதில் வடக்கு மாகாணத்தில் 15 >

## ரயிலுடன் மோதியவர் உயிரிழப்பு

சாவகச்சேரி, ஓக.18

சாவகச்சேரி, ஐயா கடைக்கு அருகில் நேற்றுமுன்தினம் ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளான இளைஞன் சிகிச்சை பயனின்றி உயிரிழந் 15 >

## திடீர் "மவுசு"

யாழ்ப்பாணம், ஓக.18

நாடளாவிய ரீதியில் நேற்றுத் திடீரென மின் துண்டிப்பு ஏற்பட்டதை அடுத்து மண்ணெண்ணைக்குத் திடீர் "மவுசு" ஏற்பட்டது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நின்று பொது மக்கள் 15 >

## வடக்கின் ஆளுநராக பொனிபஸ் பெரேரா?

யாழ்ப்பாணம், ஓக.18

வடக்கு மாகாண ஆளுநராக வன்னி மாவட்ட முன்னாள் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா நியமிக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு ஆளுநராகத் 15 >

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது
011 200 88 88
செலான் வங்கி

# சட்டவிரோதக் கட்டடங்கள் அமைய சபை அலுவலர்கள்தான் காரணம்!

### சாவகச்சேரி நகர சபை அமர்வில் உறுப்பினர்கள் காரசாரம்

**சாவகச்சேரி, ஓக. 18**

**வரியிறுப்பாளர்கள் சட்ட விரோதமாக கட்டடங்கள் அமைக்க, நகரசபை அலுவலர்களே காரணமாக இருக்கின்றனர். எனவே வரியிறுப்பாளர்களால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களுக்கு கால எல்லை வரையறை செய்யப்படல் வேண்டும். இல்லையேல் அது தொடர்பாக ஏற்படும் பாதிப்புகளுக்கு நகரசபை பொறுப்பேற்க வேண்டும்.**

இவ்வாறு சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வில் உறுப்பினர்கள் காரசாரமான கருத்துக்களை வெளியிட்டனர். இதற்கு ஒரு தீர்வு காணப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

சபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றது. அதன்போதே உறுப்பினர்கள் மேற்கண்டவாறு காரசாரமாக கருத்துக்களை முன்வைத்தனர்.

சாவகச்சேரி நகர சபையில் வரியிறுப்பாளர்களால் கையளிக்கப்படும் கட்டட விண்ணப்பங்கள் ஆதனவரிப் பெயர் மாற்றப் படிவங்கள் போன்றன உரிய காலத்தில் உறுதிப்படுத்தப்படாமையால் வரியிறுப்பாளர்கள் சட்ட விரோதமாக கட்டடங்களை அமைக்கின்றனர். வசதி உள்ளவர்கள் தப்பித்துக்கொள்ள பாமர மக்களே சபை அதிகாரிகளால் அச்சுறுத்தப்படுகின்றனர்.

வினைத்திறனுடன் கூடிய சேவையை வழங்குவோம் என்று வரியிறுப்பாளர்களிடம் வாக்குகள் கேட்ட நாங்கள், நகர சபை அலுவலர்களின் பொறுப்பற்ற செயற்பாட்டால் மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாத நிலையில் உள்ளோம் என்று உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அதன்போது கருத்துத் தெரிவித்த சபைச் செயலர், "நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கட்டட வேலைகளுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறப்படல் வேண்டும். அதிகார சபையினர் பதினைந்து கோவைகள் சேர்ந்த பின்னரே கோவைகளைப் பார்வையிட இங்கு வருகிறார்கள்" என்று தெரிவித்தார்.

அதன் பின்னர் கருத்துத் தெரிவித்த உறுப்பினர்கள், நகர சபைக்கு மாதாந்தம் ஆகக்கூடிய எண்ணிக்கையாக பத்துக்கும் உட்பட்ட கட்டட விண்ணப்பங்களே கிடைக்கின்றன.

நகர அபிவிருத்தி அதிகார சபையினர் அறிவித்தவாறு 15 கோவைகள் சேர்வதற்கு மூன்று மாதங்கள் செல்லுமாயின், அவசர தேவைக்கு கட்டடம் அமைக்கும் வரியிறுப்பாளர் சபையின் அனுமதியை எதிர்பார்த்திருக்குமாறு கோருவதில் எந்தவித நியாயமும் இல்லை. அதிகார சபையினர் இங்கு வந்து பார்வையிடும் வேளையில் சில தவறுகளைச் சுட்டிக்காட்டி நிராகரித்துச் செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இங்குள்ள அலுவலர்கள் இந்தத் தவறுகளை கண்டறிந்து அவற்றை நிவர்த்திசெய்து வைத்திருந்தால் வருகின்ற அதிகாரிகளுக்கு கட்டட விண்ணப்பங்களை நிராகரிக்கும் வாய்ப்பு இல்லாமல் போகும்.

அத்துடன் வரியிறுப்பாளர்களால் கட்டட விண்ணப்பம் வழங்கப்படும் போது அதில் காணப்படும் தவறுகள் உடனுக்குடன் சுட்டிக் காட்டப்படல் வேண்டும். இல்லையேல் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் அது தொடர்பாக விண்ணப்பித்தவருக்கு அறிவிக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் இங்கு நடைபெறுவதில்லை.

வாரத்தில் கிடைக்கும் விண்ணப்பங்கள் அதிகார சபையினர் வரத் தவறும் பட்சத்தில் தவறுகள் நிவர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அதிகார சபை அலுவலகத்துக்கு கொண்டுசென்று வரியிறுப்பாளர்களுக்கு உரிய காலத்தில் அனுமதி வழங்க வேண்டும்.

நகரசபை முன்பாக பட்டயம் எழுதப்பட்டுள்ள நிலையில் அதன்பிரகாரம் வேலைகள் நடைபெறுகின்றனவா என்பதனை தவிசாளரும் செயலாளரும் கண்காணிக்க வேண்டும்.

கட்டட விண்ணப்பம் மற்றும் ஆதனவரி பெயர் மாற்றல் படிவம் என்பன நிலையில் உள்ளன என்கின்றமை பற்றி தவிசாளரும் செயலாளரும் கண்காணித்தல் வேண்டும். என்று தெரிவித்தனர்.

அதற்குப் பதிலளித்த தவிசாளர், எதிர்காலத்தில் இவற்றுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார். (த-9)

## உரமானியம் பெறுவதற்கு 'டோக்கன்' பெறவும்

சாவகச்சேரி, ஓக. 18

தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டி கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கு மானிய உரவகைகள் பெறுவதற்கான 'டோக்கன்'கள் நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை கோவிலாக்கண்டி செல்வா சனசமூக நிலைய மண்டபத்தில் வழங்கப்படுமென்று அமைப்பின் செயலாளர் ச.புஷ்பாகரன் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் தமது காணிக்கான இலக்கம், இந்தவருட சந்தா செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் கமநல சேவைகள் நிலையத்தில் ஏக்கர் வரி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு ஆகியனவற்றைக் கொண்டு வருமாறும் அவர் கோரியுள்ளார். (த-9)

# கடைகள் திறப்பு பற்றி குழப்பம் வேண்டாம்!

### யாழ். வணிகர் கழக உபதலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக. 18

இரவு 10 மணிவரை வர்த்தக நிலையங்களைத் திறந்திருக்குமாறு ஆளுநர் கூறிய விடயம் தொடர்பில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் குழப்பமடையத் தேவையில்லை. என்று யாழ்ப்பாண வணிகர் கழக உபதலைவர் இ.ஜெயசேகரன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் வடக்கு மாகாணத்தில் செயற்படும் வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகள், இலங்கை போக்குவரத்துச் சபையின் பிராந்திய அத்தியட்சகர்கள் மற்றும் தனியார் போக்குவரத்து சபையின் சங்கத் தலைவர்கள் அழைத்த ஆளுநர், நாட்டை மீளவும் இயல்பு நிலைக்கு கொண்டுசெல்லும் முயற்சியாக யாழ்ப்பாணம் உட்பட முக்கியமான நகரங்களில் இரவு 10 மணிவரை வர்த்தக நிலையங்களை திறந்து வியாபார செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்றும் அவ்வாறான வர்த்தக நடவடிக்கைக்கு ஏதுவாக போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் கவனமெடுக்கப்படும் என்றும் வடக்கு ஆளுநர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் குழப்பமடையத் தேவையில்லை. நாட்டில் கொரோனா தொற்று தாக்கத்தால் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. பின்னர் கட்டங்கட்டமாக ஊரடங்கு தளர்த்தப்பட்டு சகல செயற்பாடுகளுக்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்பும் நோக்கிலும் நாட்டை மீள வழமைக்கு கொண்டுவருவதற்குமாகவே ஆளுநர் மேற்கண்ட அறிவிப்பை விடுத்திருக்கின்றார். இது தொடர்பில் யாழ்ப்பாண வர்த்தகர்கள் குழப்பமடையத் தேவையில்லை. வர்த்தகர்கள் தங்களால் இயலுமாக இருந்தால் இரவு 10 மணி வரை கடைகளை திறந்து வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

இதற்கு ஏதுவாக இரவு 10 மணி வரை தனியார் மற்றும் அரசு பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதே போல் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பிலும் கூடிய அக்கறை செலுத்தப்படுகின்றது. என்றார். (த-20)

## அரச – தனியார் பேருந்து தரப்பிடையே முரண்பாடு

### மன்னாரில் பயணிகள் சிரமம்

மன்னார், ஓக.18

மன்னார் புதிய பேருந்து நிலையத்தில் தனியார் மற்றும் அரச பேருந்து ஊழியர்களிடையே ஏற்பட்ட முரண்பாட்டால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டனர். இந்த முரண்பாட்டால் நேற்று பேருந்து நிலையத்தில் அமைதியின்மையும் ஏற்பட்டது.

புதிய பேருந்து நிலையம் கடந்த ஆண்டு நகரத் திட்டமிடல் அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், மன்னார் நகரப் பகுதியில் அமைக்கப்பட்டது. கடந்த மாதம் இந்தப் பேருந்து நிலையம் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது. கடந்த மாத ஆரம்பத்தில் இருந்து தனியார் பேருந்து சேவைகள் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து மேற்கொள்ளப்படுகின்றபோதும், அரச பேருந்துச் சேவைகள் முன்னர் உபயோகித்த தற்காலிகப் பேருந்து நிலையத்தில் இருந்தே மேற்கொள்ளப்பட்டு வந்தது. நேற்றுக் காலையே அரச பேருந்துச் சேவைகள் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது அரச மற்றும் தனியார் பேருந்து ஊழியர்களுக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. தனியார் பேருந்துச் சேவை மற்றும் இணைந்த போக்குவரத்துச் சேவைக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்தில் அரச பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன என்று தனியார் பேருந்து ஊழியர்கள் கூறுகின்றனர். இது தொடர்பாக இரு தரப்பினரும் முரண்பட்டதால் பேருந்து நிலையத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடன் மன்னார் நகர சபையில் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. மன்னார் நகர சபை தலைவர் , செயலாளர், உறுப்பினர்கள் பொலிஸார் மற்றும் அரச தனியார் போக்குவரத்து ஊழியர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

மக்களின் நன்மை கருதி இரு தரப்பினரும் இணைந்து ஒரே தரிப்பிடத்தில் இருந்து பேருந்துச் சேவையை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

தனியார் போக்குவரத்துச் சேவையில் இணைந்து சேவையில் ஈடுபட முடியாது என்றும், காலப் போக்கில் அது முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் என்றும் அரச பேருந்துத் தரப்பினர் தெரிவித்தனர். புதிய தரிப்பிடத்தில் தமக்கு தனியான இடத்தை ஒதுக்கித் தர வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இணைந்த சேவை அட்டவணைக்கு அமைவாகச் செயற்படுவோம் என்றும், அரச சேவைக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத வகைகளில் சேவை வழங்க முடியும் என்றும் தனியார் பேருந்துத் தரப்பினர் தெரிவித்தனர். எனினும் கலந்துரையாடலில் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

தங்கள் கோரிக்கைகள் நிறை வேற்றப்படாவிட்டால் வடக்கு, கிழக்கு முழுவதும் உள்ள அரச போக்குவரத்துச் சேவை ஊழியர்கள் சங்கங்களுடன் இணைந்து பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்த நேரிடலாம் என்று அரச பேருந்துச் சேவைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (எ-56)

# வெளிநாட்டிலுள்ள இலங்கையரே எங்கள் அரசுடன் இணையுங்கள்!

## அழைப்பு விடுக்கின்றார் தினேஸ் குணவர்த்தன

கொழும்பு, ஓக. 18

**ஆட்சியிலுள்ள பலமான அரசும் அதன் அணிசேரா மற்றும் நட்புறவுடனான வெளிநாட்டுக்கொள்கையும் நாட்டுக்கு நன்மையளிக்கும் பல முக்கிய மாற்றங்களைக் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த முயற்சியில் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களையும் அரசுடன் இணையுமாறு அழைப்பு விடுக்கின்றேன்.**

இவ்வாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். அவர் தனது அமைச்சில் சமய வழிபாடுகளுடன் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை மக்களால் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கமைவாக புதிய சவால்களை எதிர்கொள்வதற்கு அரசு தயாராக உள்ளது. கோவிட்19 தாக்கம் ஏற்பட்டிருக்கும் நிலையில், எதிர்வரும் சில வருடங்களுக்குள் பொருளாதார இலக்குகளை அடைவதற்காக இலங்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது. ஏற்றுமதி, முதலீடுகள் மற்றும் இலங்கையர்களின் தொழில்முயற்சிகளை விரிவாக்கும் நோக்குடன் வர்த்தக திணைக்களமும் வெளிநாட்டமைச்சின் மேற்பார்வையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. என்று அமைச்சர் தெரிவித்தார்.

நிகழ்வில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலர் அட்மிரல் கொலம்பகே உரையாற்றுகையில், ஜனாதிபதியின் தொலைநோக்கான தேசிய பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டு உறவுகள் ஆகிய மூன்று தூண்கள் பற்றிக் குறிப்பிட்டார். புதிதாக நியமிக்கப்பட்ட வெளிநாட்டமைச்சரின் தொலை நோக்கானது நிச்சயமாக இலங்கையை சர்வதேச அளவில் நேர்மறையாகப் பிரதிபலிக்கும் என்று நம்புகின்றேன் என்று தெரிவித்தார்.

நிகழ்வில் அமைச்சர் பந்துல குணவர்த்தன, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே மற்றும் அமைச்சின் பிற சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொணடனர். (கு)

# 5,000 ரூபா பெற்று கடமையேற்ற பிரதமர்

கொழும்பு, ஓக. 18

பிரதமர் மஹிந்த ராஜபக்ச நிதியமைச்சில் நேற்று தமது கடமைகளைப் பொறுப்பேற்றார். இந்த நிகழ்வில் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆடிகல உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

நேற்று முற்பகல் 10.16 அளவில் மத வழிபாடுகளுக்குப் பின்னர் அவர் கடைமைகளைப் பொறுப்பேற்றார்.

நிகழ்வின் அடையாளமாக மத்திய வங்கி ஆளுநரின் ஊடாக பிரதமருக்கு புதிய 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள் ஒன்று வழங்கப்பட்டது. (கு)

# கொழும்பில் 57 வீதமானோர் அதிக நிறையுடையவர்கள்!

## *மருத்துவ சங்கத் தலைவர் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 18

கொழும்பில் வசிப்பவர்களில் 57 வீதமானோர் அதிக நிறையுடையவர்கள் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்க தலைவர் விசேட மருத்துவ அநுருத்த பாதெனிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற மாநாடொன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேற்குறித்த நிலைமையை மாற்றியமைக்க ஒருவர் தன்னை சுகதேகியாக பாதுகாத்துக் கொள்ளத் தேவையான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், ஜனாதிபதியின் பதவிக் காலம் நிறைவடையும் போது நாட்டில் 40 வீதமானோர் நோயாளர்களாக அடையாளம் காணப்படுவர்.

எனவே உலக சுகாதா ஸ்தாபனம் அறிவித்துள்ளதன்படி உள்ளூர் மற்றும் பாரம்பரிய உணவு பழக்கவழக்கத்தைக் கடைப்பிடிப்பது கட்டாயமானது. என்று அவர் மேலும் தெரிவித்தார். (கு)

# இலங்கையின் ஏற்றுமதி இந்த வருடம் 26.4 வீத வீழ்ச்சி

கொழும்பு, ஓக. 18

இலங்கையின் ஏற்றுமதிகள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் முதல் பாதியில் 26.4 வீதத்தால் குறைவடைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொவிட்19 காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டின் முதல் பாதியில் 5 தசம் 9 மில்லியன் டொலர் ஏற்றுமதிகள் இடம்பெற்றுள்ளன. எனினும், இந்த ஆண்டு அதன் எண்ணிக்கை 4 தசம் 4 வீதமாகச் குறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும், ஜூலை மாதத்துக்குப் பின்னர் ஏற்றுமதி எண்ணிக்கை அதிகரிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)



# லொறி - ஓட்டோ விபத்து ஓட்டோ சாரதி படுகாயம்

கொடிகாமம், ஓக. 18

லொறி ஓட்டோ நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், ஓட்டோ சாரதி ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ். செம்மணி வீதியில் நேற்றுத் திங்கட்கிழமை காலை 7.45 அளவில் விபத்து இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (கு-159)

# மருந்துகள் உற்பத்தி இனி இலங்கையில்!

## *5 வருடங்களில் நடக்கும் என்கின்றார் பஸில் ராஜபக்ச*

கொழும்பு, ஓக. 18

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் நாட்டின் ஒளடத தேவையை பூர்த்தி செய்வதுடன், ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு உற்பத்தியை அதிகரிப்பதில் அரசு கவனம் செலுத்தியுள்ளதாக பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி பணிக்குழுவின் தலைவர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சுகாதாரத் துறையை பிரதி நிதித்துவப்படுத்தும் அரச அதிகாரிகளுடன் அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூர் ஒளடத தேவையில் 85 வீதத்தை இறக்குமதி செய்ய அரசு ஏற்கனவே பெரும் செலவுகளைச் செய்து வருகின்றது. ஏற்றுமதி திறனைக் கொண்ட தொழிற்சாலைகளை தனியார் முதலீட்டாளர்களைக் கொண்டு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது. (கு)

# முல்லைத்தீவில் 99 பேர் விடுவிப்பு

வெளிநாட்டில் இருந்து நாட்டுக்கு வந்து முல்லைத்தீவில் 59 ஆவது படைப்பிரிவின் தனிமைப்படுத்தல் முகாமில் 14 நாள்களை நிறைவு செய்த 99 பேர் நேற்று அவர்களுடைய வீடுகளுக்கு விடுவிக்கப்பட்டனர். கடந்த 2ஆம் திகதி அவர்கள் வந்திருந்தனர். (கு-19)

## *ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் வரும்*

# பாடசாலைகளை மத்திக்கு மாற்றுகின்றமை ஆளுநர்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

கொழும்பு, ஓக. 18

நாடு முழுவதும் ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் உள்வாங்கும் பாடசாலைகளை மத்திய கல்வி அமைச்சின் கீழ் கொண்டு செல்வதற்கு மாகாண ஆளுநர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தமையால் மாகாண ரீதியிலேயே அதனை ஆராய்ந்து தீர்க்குமாறு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையில் பத்திரமுல்லையில் உள்ள கல்வி அமைச்சின் அலுவலகத்தில் நேற்று மாகாண ஆளுநர்கள், பிரதம செயலாளர்கள் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்ட விசேட சந்திப்பு நடைபெற்றது.

சந்திப்பில் மூன்று கல்வி இராஜாங்க அமைச்சர்களும் கலந்து கொண்டனர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார் என்று தெரிவிக்கப்பட்டது.

நாடு முழுவதும ஆயிரம் பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு சகல வசதிகளுடன் கூடிய பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யும் அதே நேரம் அவை அனைத்தும் முழுமையாக மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்லப்படவுள்ளன என்று கூறப்படுவது தொடர்பில் பேசப்பட்டது. இதன்போது பாடசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டு செல்லப்படுவதனை ஏற்க முடியாது என்று பல ஆளுநர்கள் கல்வி அமைச்சரிடம் தெரிவித்தனர். இவற்றை செவி மடுத்த கல்வி அமைச்சர் குறித்த விடயத்தை மாகாண ரீதியில் ஆராய்ந்து இறுதி முடிவு எடுக்குமாறு தெரிவித்தார்.

முன்பள்ளிகளை கல்வி அமைச்சின் கீழ் இனைப்பது தொடர்பான முயற்சிகள் நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்ட நிலையில் அதற்கான ஏற்பாடுகள் தொடர்பிலும் பிரஸ்தாபிக்கப்பட்டது. பின்தங்கிய இடங்களிலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு க.பொ.த உயர்தரத்துடன் கூடியவர்களை போட்டிப் பரீட்சை மூலம் நிரப்புவது தொடர்பில் ஆராயப்பட்டது. அந்தந்த மாவட்டங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு அதே மாவட்டத்தைச் சேரந்தவர்களை மாவட்டம் மாறாத நிபந்தனையின் கீழ் நியமிப்பதே பொருத்தமானது எனறு சுட்டிக்காட்டப்பட்டது.

எனினும், க.பொ.த உயர்தரத்துடன் ஆசிரியர்களை நியமிப்பதனை அநேகமானோர் நிராகரித்தனர். ஆசிரியர்கள் கலாசாலை, கல்வியல் கல்லூரிகளின் அனுமதியை அதிகரித்து குறித்த மாகாண ஆசிரியர்களை அதே மாகாணத்திலேயே நியமிக்க வேண்டும் என்றும் அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (கு)

# வீதியைச் சீரமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை

**மன்னார், ஓக.18**

**மன்னார் காத்தான் குளம் விவசாய வீதியைத் திருத்தித் தருமாறு அந் தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; மன்னார் நானாட்டான் பிர தேசத்துக்கு உட்பட்ட காத் தான் குளம் விவசாய வீதி யானது காலாகாலமாக செப்பனிடப்படாமல் உள் ளது. பயிர்ச் செய்கைக் காலங்களில் விவசாய நட வடிக்கைகள் எதுவும் மேற் கொள்ள முடியாமல் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இந்த வீதி மூன்று கிலோ மீற்றர்



தூரம் வரை வீதித்தடங்கள் அழிந்து குன்றும் குழியு மாக உள்ளது. வீதிப் பாவனையில் சுமார் 350 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன. எனவே மழை காலம் வந்து பெரும்போக விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன்ன தாக காத்தான்குளம் விவ சாய வீதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் திருத்தித் தர வேண்டும்-என்றனர். (ஐ-213)

## இணக்க சபை அமர்வுகள்

வவுனியா, ஓக.18

வவுனியா இணக்க சபை அமர்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மீள ஆரம்பிக்கப்படவுள்ளன என அதன் தலைவர் சி.வரதராசா அறிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இணக்க சபையால் மேற்கொள்ளப்பட்டு வந்த பிணக்குகள் தொடர்பான விசாரணைகள் நிறுத் தப்பட்டு இருந்தன.

தற்போது சுமுகமான நிலைமை ஏற்பட்டு வரும் நிலை யில் மீளவும் இணக்க சபையின் செயற்பாடுகளை ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்துவதற்கு தீர்மானிக்க ப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி யில் அமர்வு நடைபெறும்.

இதன்போது நீதிமன்ற பிணக்குகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் இணக்க சபைத் தவிசாளர் தெரிவித்தார். (ஐ-110)

## நூல்கள் அன்பளிப்பு



யாழ்ப்பாணம் சித்திவிநாயகர் வித்தியாலயத்துக்கு ஒரு தொகை சிறுவர் புத்தகங்கள் மற்றும் இதழ்கள் வழங் கப்பட்டன.யாழ்ப்பாணம் ஹாட்லிக் கல்லூரியின் 2014 ஆம் ஆண்டு மாணவர்களால் கடந்த வெள்ளிக் கிழமை இவை வழங்கப்பட்டன. (ஐ)

## கொரோனாவிலிருந்து 6 பேர் குணமடைவு

கொழும்பு, ஓக. 18

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 6 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதற்கமைய இலங்கையில் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2,676 ஆக உயர்வடைந்துள் ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது கொரோனாத் தொற்றுக்குள்ளான 2,893 பேரில் 206 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் கொரோனா தொற்று சந்தேகத்தில் 55 பேர் தொடர்ந்தும் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட் டுள்ளதுடன் 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 22 ஆயிரம் கன்றுகள் இதுவரை கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக.18

வடக்கு மாகாணத்தில் தென்னை அபிவிருத்திச் சபை யால் இதுவரை பயனாளிகளுக்கு 22 ஆயிரம் உயர் தர தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

சீ.ஆர்.ஐ.சீ-65 உயர்ரக இனத்தைச் சேர்ந்த இந்த தென்னம் கன்றுகள் அனைத்தும் மானிய விலைக்கு வழங்கப்பட்டு வருகின்றன என தென்னை அபிவிருத்தி சபை தெரிவித்தது.

இந்த உயர்ரக தென்னம் கன்றுகளில் இருந்து குறைந் தது மூன்று வருட காலத்தில் பயனாளிகள் பயனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வடக்கில் ஐந்து மாவட்டங்களிலும் அதிகமான பயனா ளிகள் இந்த தென்னம் கன்றுகளை அதிக விருப்பம் கொண்டு பெற்றுச் செல்கின்றனர்.

இன்னும் 60 ஆயிரம் வரையிலான தென்னம் கன்று களை பயனாளிகளுக்கு வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## முதியோர் இல்லத்தில் தொற்று நீக்கல்

கைதடி, ஓக.18

கைதடி அரச முதியோர் இல்ல வளாகத்தில் கிருமித்தொற்று நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை முதியோர் இல்ல வளாகத்தைச் சுற்றி, இலங்கை செஞ்சிலுவைச் சங் கத்தினரால், கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் முதியோர்களுக்கான சுகாதார வழிகாட்டல் மற்றும் முகக்கவசம் அணிதல், தனிநபர் இடைவெளி பேணல் என்பன தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வரு கின்றன. (சு-17)

## வெயிலில் வாடும் குடிதண்ணீர் போத்தல்கள்

யாழ்ப்பாணம், ஓக.18

வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வெயிலில் படக் கூடியவாறு குடிதண்ணீர்ப் போத்தல்களை வைத்து விற்பனை செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என்று மாநகர சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

வெயிலில் படும் இடங்களில் குடி தண்ணீர்ப் போத்தல் களை வைப்பதால், அவை பழுதடையலாம், அவற்றை மக்கள் நுகர்வதால் நோய்த்தொற்றுக்கள் ஏற்படும். எனவே மாநகர வர்த்தக நிலையங்களில், வெயிலில் படும் இடங்களில் குடிதண்ணீர் போத்தல்களைக் காட் சிப்படுத்தினால், அவர்களுக்கு எதிராக, சுகாதாரச் சட்டத்துக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்று மாநகர சுகாதாரப் பகுதியினர் அறிவித் துள்ளனர். (சு-17)

## வட்டு. இந்துவில் திறன் வகுப்பறை



யாழ்ப்பாணம், ஓக.18

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறைத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. கல்லூரியின் அதிபர் அ.ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினராக கோட்டக் கல்விப் பணிப்பாளர் நோபேட் உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதற்கான நிதியுதவியை இரத்தினம் அறக்கட்டளை யின் ஸ்தாபகரும், மருத்துவருமான ஆர். நித்தியானந்தன் வழங்கினார்.

இதற்கான நிதியுதவி மேலும் ஒரு பாடசாலைக்கு இவ ரால் வழங்கப்படவிருப்பதால், தேவையுடைய பாடசா லையைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (சு-27)

## அமைச்சரவைப் பேச்சாளர் பதவியை மறுத்தார் பந்துல?

கொழும்பு, ஓக. 18

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர் தன, அமைச்சரவைப் பேச்சாளர் பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துள் ளார் எனத் தெரியவருகிறது.

தனக்கு வழங்கப்பட்டுள்ள அமைச் சுக்கான கடமை மற்றும் பொறுப்பு களை நிறைவேற்ற முக்கியத்துவ த்தை வழங்கும் தேவை இருப்பதா கக் கூறி பந்துல குணவர்தன, அமைச்சரவைப் பேச்சாளர் பதவி யைப் பெற மறுத்துள்ளார்.

தனக்கு வழங்கப்பட்டுள்ள மேலதிக பொறுப்புக்களில் இருந்து தன்னை விடுவிக்குமாறும், அந்தப் பொறுப் பில் தகுதியான வேறு ஒருவரை நிய மிக்குமாறும் அவர், பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நொட்டை சொன்னவர்கள் பட்டபாடு

மின்சாரத் துண்டிப்பால் நேற்று ஒரே நாளில் முழு இலங்கையும் குறணப் போய், மூலைக்குள் ஒடுங்கிவிட்டது. கொறொனாக் கால ஊரடங்கில் கூட இலங்கை இப்படி நிலை தடுமாறியதில்லை. ஆனால் பலமணிநேர மின்துண்டிப்பு அத்தனை அலுவல்களையும் அரைகுறையோடு நிறுத்தச் செய்துவிட்டது.

ஆரம்பத்தில் மின் துண்டிக்கப்பட்ட போது, வழக்கம் போல ஒரு மணித்தியாலத்துக்குள் வந்துவிடும் என்பதாகவே பலரின் நினைப்பும் இருந்தது. அதனால் பெரிதாக யாரும் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் சில மணித்தியாலங்களில் இந்த மின்வெட்டு, குறித்த சில பகுதிகளில் மட்டும் நிகழ்வில்லை, நாடு முழுதுமே எனத் தெரியவந்தபோது தான் நிலைமை கொஞ்சம் சிக்கல் என்பது பலருக்கும் புரிய ஆரம்பித்தது. போதாக்குறைக்கு மின்சார சபையும் "இன்னும் இரண்டு மணித்தியாலத்துக்குள் மின் விநியோகம் சீரடைந்துவிடும்" என்று சொல்லி பல மணித்தியாலங்கள் கடந்தும், மருந்துக்கும் கூட மின்சாரம் எட்டிப் பார்க்கவில்லை.

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தில் திடீரென ஏற்பட்ட கோளாறால், மத்திய மின் பரிமாற்ற வலையமைப்பு கட்டுப்பாட்டை இழந்ததாலேயே இந்த மின்துண்டிப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆனாலும் சாதாரண மின் உற்பத்தி நிலையக் கோளாறால் ஒட்டுமொத்த நாட்டையும் அலற விடுமளவுக்கு இவ்வளவு நீண்ட நேர மின்வெட்டு ஏற்படுமா என்ற கேள்வியும் எழாமலில்லை. அதைவிட மின்சார விநியோகத்தைச் சீராக்கும் முயற்சியை விட, "இப்படி திடீரென ஏற்பட்ட கோளாறுக்கும், மின் விநியோகம் தடைப்பட்டமைக்கும் என்ன காரணம் என்பதைக் கண்டறிய உடனடியாக ஒரு விசாரணைக்குழு நியமிக்கப்படும்" என மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும அவசரமாக அறிவித்தமை இன்னும் சந்தேகத்தைக் கிளறுகின்றது. தற்செயலாக ஒரு கோளாறு ஏற்படுவதும், அதனால் அசௌகரியங்கள் விளைவதும் அவ்வப்போது நடப்பதுதான். அப்படி இம்முறையும் நடந்திருந்தால் எதற்காக விசாரணைக்குழு, அது இதென்று அரசு அந்தரப்பட வேண்டும்? இப்படிப் பதறியடிப்பது நேற்றைய மின்வெட்டுக்குப் பின்னால் ஏதோ ஒரு பாரதூரமான காரணம் ஒளிந்திருப்பதாகவே படுகின்றது.

இதேபோன்று நல்லாட்சிக் காலத்திலும் இரண்டு,மூன்று தடவைகள் மின்உற்பத்தி நிலையங்களில் ஏற்பட்ட கோளாறால் நாடு முழுதும் மின் விநியோகம் சீர்கெட்டிருந்தது. ஒரு சில நாட்கள் முற்றாக இல்லாதிருந்த மின்சாரம் பின்னர் சுழற்சி முறையில் வழங்கப்பட்டு, பின்னரே படிப்படியாக இயல்புக்குத் திரும்பியிருந்தது. அப்போது ராஜபக்சக்கள் எதிரணியில் இருந்தபடி அரசைக் கடுமையாக விமர்சித்திருந்தனர். "கையாலாகாதவர்கள் ஆட்சியில் இருந்தால் இப்படித்தான் நடக்கும். சாதாரண மின்விநியோகத்தைக் கூட ஒரு சில மணித்தியாலங்களில் சீர்செய்ய முடியாதவர்கள் தான் நாட்டைத் திருத்தப்போகிறார்களாம்" என்றெல்லாம் கேலியும் பேசினார்கள். ஆனால் அப்படி இருந்த இடத்தில் இருந்துகொண்டு, நொட்டை சொல்வதை விடவும், செயலில் காட்டுவது மகா கடினமானது என்பதை நேற்றைய சம்பவத்தோடு நன்கு உணர்ந்திருப்பார்கள். ஆட்சிக் கட்டிலில் உத்தியோகபூர்வமாக உட்கார்ந்தவுடனேயே மின்சார வடிவில் முதலாவது சிக்கல் ராஜபக்சக்களுக்கு வந்திருக்கிறது. ஆனால் அந்தச் சிக்கலை அவர்கள் கையாண்டவிதம் அவர்களுக்கும், நல்லாட்சிக்காரர்களுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லையென்பதையே காட்டியிருக்கிறது. இதுவே நல்லாட்சிக் காலத்தில் நடந்திருந்தால் சிங்கள மக்கள் உடனேயே " கோத்தாபய ஆட்சிக்கு வந்தால் மின்சாரம் நின்ற அடுத்த நொடியே இராணுவத்தை அனுப்பி எல்லாவற்றையும் திருத்தி உடனே மின்சாரத்தை வழங்குவார்" என்று அடுக்கியிருப்பார்கள். ஆனால் இப்போது அவர்கள் ஒரு 'சாகச நாயகனாக' நினைத்த கோத்தா ஆட்சியில் இருக்கின்ற போது தான், இப்படியான மிக நீண்ட மின் துண்டிப்புக்கு இலங்கை மக்கள் முகம் கொடுத்திருக்கிறார்கள். இனிமேல், இப்படித்தான் சிங்களப் பேரினவாதிகளின் சாகச நாயகர்களின் விம்பம் கலைந்து, அவர்களுடைய நிர்வாகச் சீத்துவக்கேட்டை நாடு அறியப்போகின்றது என்பதையே நேற்றைய மின் துண்டிப்பு சொல்லாமல் சொல்கின்றது.

# கொரோனாவின் புதிய திரிபு மலேசியாவில் கண்டுபிடிப்பு

## 10 மடங்கு வேகமாகப் பரவும் என எச்சரிக்கை

**கோலாலம்பூர், ஓக.18**

**கொவிட்19 வைரஸின் புதிய திரிபு எனக் கருதப்படும் 'டி614ஜி' வகை பிறழ்வு மலேசியாவில் கண்டறியப்பட்டுள்ளது. இந்த வகைத் தொற்று மிக வேகமாகப் பரவக்கூடியது என மலேசிய அரசு எச்சரித்துள்ளது. இதுவரை இந்த உலகம் அறிந்துள்ள கொவிட்19 வைரஸைக் காட்டிலும், டி614ஜி வகைத் தொற்று என்பது பத்து மடங்கு வேகமாகப் பரவும் என்று மலேசிய சுகாதார அமைச்சின் தலைமை ஆணையர் வைத்தியர் நூர் ஹிஷாம் தெரிவித்துள்ளார்.**

அனைவரும் கூடுதல் கவனத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயல்பட வேண்டுமெனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார். அண்மையில் தமிழகத்தின் சிவகங்கை பகுதியிலிருந்து மலேசியா திரும்பிய ஆணொருவருக்கு டி614ஜி வகைப் பிறழ்வுடன் கூடிய கொரோனா கிருமித் திரிபு பாதிப்பு இருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டது. இதையடுத்து அவர் தீவிர மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அதன் முடிவில் அவருக்கு டி614ஜி வகைப் பிறழ்வுடன் கூடிய கொரோனாத் தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது. மலேசியாவின் உலுதிராம் பகுதியைச் சேர்ந்த மற்றொருவருக்கும் இதேபோன்ற பாதிப்பு இருக்கின்றது என மலேசிய சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது. மலேசிய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் இந்தப் புதிய வகைப் பாதிப்பை கண்டறிந்துள்ளது.

இந்த வகைத் தொற்று பத்து மடங்கு வேகமாகவும் மிக எளிதாகவும் மற்றவர்களுக்குப் பரவும். ஒரு தனி நபரிடம் இருந்து அதிகமானவர்களுக்கு வைரஸ் தொற்று பரவினால் அவர் 'சுப்பர் ஸ்பிரெட்டர்' (Super Spreader)எனக் குறிப்பிடப்படுகிறார். டி614ஜி வகை பிறழ்வுடன் கூடிய கொரோனா கிருமித் திரிபு பாதிப்பு பரவுவது கடந்த ஜூலை மாதம் தான் தெரிய வந்தது. எனவே தற்போதுள்ள தடுப்பு மருந்துகளால் இந்த வகை பாதிப்பை தடுக்க முடியுமா எனும் சந்தேகம் எழுந்துள்ளது. எனவே பொதுமக்கள் சமூக இடைவெளியைக் கடைபிடித்தல், முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட அனைத்து சுகாதார நடவடிக்கைகளையும் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். மலேசியாவில் கொரோனா வைரஸின் தாக்கம் கட்டுக்குள் உள்ளது," என்று வைத்தியர் நூர் ஹிஷாம் மேலும் தெரிவித்துள்ளார். (ரி1)

# வேலைவாய்ப்புக்களைப் பெற்ற பட்டதாரிகளின் விவரம் 'ரிலீஸ்'!

கொழும்பு, ஓக. 18

வேலைவாய்ப்புப் பெற்ற 50 ஆயிரம் பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அரச சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு சென்று மேற்படி பெயர்ப் பட்டியலைப் பார்வையிட முடியும் என அமைச்சின் செயலாளர் ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

அதற்கமைய தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதம் எதிர்வரும் நாள்களில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என செயலாளர் தெரிவித்துள்ளார். புதிய நியமனம் பெற்ற 50 ஆயிரம் பட்டதாரிகளும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி தங்களுக்கு அருகில் உள்ள பிரதேச செயலகங்களில் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

இதேவேளை, குறைந்த வருமானம் கொண்ட ஒரு லட்சம் பேரின் வேலை வாய்ப்பு தொடர்பில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் அதற்கான செயலணி நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# ஆசிரியர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக. 18

இளவாலையில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர் இனந்தெரியாத கும்பல் ஒன்றால் தாக்கப்பட்டுள்ளார் என்று இளவாலை பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

அரியாலையைச் சேர்ந்த இந்த ஆசிரியர் நேற்றுக் காலை தான் கற்பிக்கும் பாடசாலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோதே மேற்படி தாக்குதல் இடம்பெற்றுள்ளது. 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் ஆசிரியரை வீதியில் வழிமறித்து அவர் மீது தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். தாக்குதலுக்குள்ளான ஆசிரியர் பாடசாலை அதிபர் ஊடாக இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை வழங்கியுள்ளார். சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-26)

# கைதுசெய்யச் சென்ற வேளை பொலிஸார் மீது தாக்கு!

யாழ்ப்பாணம் ஊரெழு பகுதியில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரைக் கைதுசெய்யச் சென்ற கோப்பாய் பொலிஸார் மீது இனந் தெரியாத குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: ஊரெழு போயிட்டிப் பகுதியில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவரைக் கைதுசெய்வதற்காக மோட்டார் சைக்கிள் ஒன்றில் இரண்டு பொலிஸார் சென்றுள்ளனர். அப்பகுதிக்குச் சென்று இந்த நபரை தேடித் திரிந்தபோது அங்கு இரு தரப்புக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. குறித்த முரண்பாடு தொடர்பில் விசாரிக்கச் சென்ற பொலிஸார் மீது அங்கு நின்ற இளைஞர் குழு தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. இதில் இரண்டு பொலிஸார் காயமடைந்தனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-20)

# கஞ்சா பீடியுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 18

கஞ்சா பீடியை வைத்து புகைத்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் கோண்டாவில் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். கைதான நபர் இணுவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞன் என பொலிஸார் கூறினர். வீதி கண்காணிப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்ற இளைஞனைப் பிடித்து விசாரணை செய்தபோது கஞ்சா பீடியை நுகர்ந்து கொண்டிருந்தார் என்று பொலிஸார் கூறினர். (ம-25)

# மஞ்சள் தூளுடன் கோதுமைமா கலப்பு

## பரிசோதனை அறிக்கையில் வெளிச்சம்

**மன்னார், ஓக.18**

**மன்னார் பஸார் பகுதியில் மஞ்சள் தூளுடன் கோதுமை மா மற்றும் அரிசி மா கலந்து விற்பனை செய்வது தெரியவந்துள்ளது. நுகர்வோர் விவகார அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்ட பரி சோதனைகளில் இது கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.**

இது தொடர்பில் தெரியவருவதாவது:

மன்னார் பஸார் பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் மஞ்சள் தூள் பதுக்கி வைக்கப்பட்டு அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது எனப் பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இப் பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் 100 கிராம் மஞ்சள் தூள் 350 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு கிலோ மஞ்சள் தூள் 3500 ரூபாய் முதல் 5 ஆயிரம் ரூபாய் வரை பதுக்கி வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றது எனப் பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர். நாட்டில் மஞ்சள் தூளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் பெரிய அளவில் இலாபத்தைப் பெற்றுக் கொள்வதற்கே இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. விற்பனை செய்யப்படும் மஞ்சளில் பெரும்பாலானவற்றில் கோதுமை மா மற்றும் அரிசி மா கலந்துள்ளமை தெரியவந்துள்ளது. நுகர்வோர் விவகார அதிகார சபையினால் முன்னெ டுக்கப்பட்ட பரிசோதனைகளில் இது கண்டறியப்பட்டுள்ளது .

மஞ்சளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக மாவுடன் வர்ணங்களைக் கலந்து விற்பனை செய்யப்படுகின்றது என நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. அதற்கமைய, சந்தைகளில் விற்பனை செய்யப்படும் மஞ்சளின் மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு, அரச இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டிருந்தன. அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையின் அடிப்படையில் மஞ்சள் தூளின் அரைவாசியில் கோதுமை மா மற்றும் அரிசி மா கலந்துள்ளமை தெரியவந்துள்ளது. (ரி1-56)

---

## பேருந்தில் சிக்கி ஒருவர் உயிரிழப்பு

நுவரெலியா, ஓக.18

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சில்லில் சிக்கி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். என்று நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்

இச்சம்பவம் நேற்று மாலை நுவரெலியா பேருந்து தரிப்பிடத்துக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது. நுவரெலியா டிப்போவிலிருந்து பேருந்து தரிப்பிடத்துக்குச் சென்ற பேருந்திலேயே குறித்த நபர் மோதுண்டு சில்லில் சிக்கி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப)

---

## முட்டை விலை மேலும் உயர்வு

கொழும்பு, ஓக.18

நாட்டில் முட்டையின் விலை சடுதியாக உயர்வடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் ஒரு முட்டையின் சில்லறை விலை 22 முதல் 24 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

சில பகுதிகளில் ஒரு முட்டையின் விலை 25 ரூபாவாக உயர்வடைந்துள்ளது.

நாட்டில் தினசரி முட்டை நுகர்வு சுமார் 85 லட்சமாக உள்ளது. இந்நிலையில் தற்போது அது சுமார் 30 சதவீதம் குறைந்துள்ளது.

கொரோனா பரவலையடுத்து, கோழி வளர்ப்பு குறைந்து வருவதும், விலங்குகளின் தீவனத்திற்கு அரிசி பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டதும் முட்டை விலையின் அதிகரிப்புக்கு காரணம் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இந்நிலையில், கால்நடை தீவனப் பொருள்களின் விலையைக் குறைக்க அரசு தலையிட்டால் முட்டைகளின் விலையைக் குறைக்க முடியும் என அனைத்து இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ரி3)

---

## மணிக்கோபுரம் திறந்து வைப்பு

சாவகச்சேரி, ஓக.18

சாவகச்சேரி அஞ்சலக வீதியில் உள்ள அமெரிக்கன் சிலோன் மிஷன் சாவகச்சேரி திருச்சபைக்கு அமைக்கப்பட்ட மணிக்கோபுரம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இது இப்பகுதியைச் சேர்ந்த காலஞ்சென்ற பூதத்தம்பி குலவீரசிங்கம் தம்பதியினரின் நினைவாக அவரது குடும் பத்தினரின் அன்பளிப்பாக அமைக்கப்பட்டதுடன், திருச்சபையின் ஓய்வு நிலை போதகர் பி.ஜே.சூரியகுமாரால் திறந்து வைக்கப்பட்டது. (ரி1-9)





---



## ஏ-9 வீதியோரத்திலும் பிளாஸ்ரிக் வேட்டை!

### தொடர்கிறது இளைஞர்களின் சமூகப்பணி

யாழ்ப்பாணம், ஓக.18

விதையனைத்தும் விருட்சமே குழுமத்தின் "பிளாஸ்டிக் கழிவுகள் அற்ற யாழ்ப்பாணத்தை நோக்கி" வேலைத் திட்டத்தின் முதல் கட்டமாக ஏ-9 வீதியில் கைதடிச் சந்திக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் வீதியோரம் வீசப்பட்டிருக்கும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் சமூகப்பணி நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 150 மூடைகளில் பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றப்பட்டன என்றும், இது ஒரு கவலைக்குரிய விடயமாகும். இதனை பயணிகள் கவனம் எடுத்து செயற்பட்டால் பிரதான வீதியோரம் இவ்வாறு பெருமளவு கழிவுகள் பெரு குவதைக் குறைக்க முடியும் என்றும் இச் செயற்பாட்டை முன்னெடுத்த இளைஞர்கள் தெரிவித்தனர். (ரி1)

---

## 250 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஓக.18

கிளிநொச்சி உருத்திரபுரம் 10ஆம் வாய்க்கால் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 23 லீற்றர் கசிப்பும் 250 லீற்றர் கோடாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் மது ஒழிப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்றத்தகவலுக்கமைய இந் நடவடிக்கை எடுக்கப்பட்டது என மது ஒழிப்புபிரிவு பொறுப்பதிகாரி டி.எம் சதுரங்க தெரிவித்தார். (ரி1-113)

---

## இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்கில் நாளை

யாழ்ப்பாணம், ஓக.17


யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து சூம்(Zoom) செயலி வாயிலாக 20 நாள்கள் இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன.

இதன் பதினேழாவது நாளாகிய இன்று செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை தென் கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் ம.அப்துல்லா ரமீஸ் "இலங்கைத் தமிழ் இதழ்கள்" என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன்பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

Zoom meeting ID :
477 159 8996
pass word : wts

---




## பெண் நாய்களுக்கு இலவச கருத்தடை முகாம்

யாழ்ப்பாணம், ஓக.18

பெண் நாய்களுக்கான இலவச கருத்தடை முகாம் ஜே/181 ,ஜே/179 கிராம அலுவலர் பிரிவுகளில் நேற்று நடை பெற்றது. தெரு நாய்களினால் ஏற்படும் விபத்து மற்றும் மனித வாழ்வுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் ஆகியவற்றை குறைப்பதற்கு சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பனிமனை ஏற்பாட்டில் இந்த இலவச முகாம் நடத் தப்பட்டது. (ரி-17)

# தேரேறி அருட்காட்சி தந்தான் நல்லைக் கந்தன்...!

படங்கள்: சிவசாந்தன்











யாழ்ப்பாணம், ஓக. 18

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது. பெருந்திரு விழா கடந்த 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருந்த நிலையில் 24 ஆம் நாளான நேற்று தேர்த் திருவிழா நடைபெற்றது. சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய திருத்தேரில் வலம் வந்து காட்சி தந்த வேலனைக் காண பெருந்திரளான மக்கள் அங்கு கூடியிருந்தனர். காலை 4.30 மணியளவில் ஆரம்பமான விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய் காலை 6 மணிக்கு தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார். கொரோனாத் தொற்றுக் காரணமாக சுகாதார நடைமுறைகளுடன் பக்தர்கள் தங்கள் வழிபாடுகளை மேற்கொண்டனர். தேர்த் திருவிழாவைக் காண நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வருகைதந்து முருகப்பெருமானை தரிசித்துச் சென்றனர். இதேவேளை இம்முறை கொரோனா தொற்றுக் காரணமாக அங்கப் பிரதட்சணம், காவடிகள், கற்பூரச் சட்டிகள் போன்ற நேர்த்திக் கடன்களுக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது. (ஐ)




## நல்லூரான் சிறப்பம்சம்

### என்றும் உன் துணை

ஆழியிலும் ஆறுமுகம் துணை
ஊழியிலும் உனதருள் துணை
இன்பத்தை ஈந்தளிக்கும் முருகா
உன்புகழ் பாட மொழிகள் போதா
வேதமாய் உள்ளவனே வேலவா
நாதமாய் உள்ளவனே நந்தா
உள்ளமதில் உனை எண்ணும் போதே
அள்ளித் தந்திடுவாய் எமக்கருளே!

*பிரபாகரன் வேதிகா*

### கீர்த்தி பெற வைத்திடையா!

திக்கெட்டும் ஒளியுமிழும்
திகட்டாத கந்த வள்ளல்
பக்குவமாய்ப் பார் புரக்கும்
பைந்தமிழாய் வந்த செம்மல்
துக்கத்தைத் துடைத் தழிக்கும்
தூய தமிழ் மறவா!
சிக்கல்தமைக் களைந் துலகை
கீர்த்தி பெற வைத்திடையா!

*கலாபூஷணம்*
*கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்*

### ஓடி வா என் முருகா!

முக்கண்ணிலிருந்து தோன்றியவனே
இக்கோவில் புகுந்த நல்லூரானே
இடுக்கண் வரும் போது துயர் நீக்கும் முதல்வனே
ஐங்கரனுக்கு இளையோனே
(அக்) கண்ணனின் மருமகனே
சரவண பொய்கையில் உதித்தவனே
என்னில்லல் தீர்க்க விரைந்து
தேரேறி வா முருகா!
வேற்கண் வேயோனே அருள் பாலிக்க
ஓடி வா என் முருகா!

*ஆ.யசோதாயினி, சாவகச்சேரி*

# நல்லூர் தீர்த்தோற்சவத்தை 'யூரியூப்'பில் பார்வையிடலாம்

யாழ்ப்பாணம், ஓக. 18

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் இன்று நடைபெறும் தீர்த்தோற்சவத்தை ஆலயத்தின் உத்தியோகபூர்வ யூரியூப் (YouTube) தளத்தில் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றைத் தடுக்கும் வகையில் ஆலயத்துக்குள் பக்தர்கள் வருவதைத் தவிர்க்கும் முகமாக முருகப்பெருமானின் ஷண்முக தீர்த்தக் கேணியில் நடைபெறும் தீர்த்தோற்சவத்தையும்,மாலை நடைபெறும் கொடியிறக்க நிகழ்வையும் இதன் ஊடாக ஒளிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தீர்த்தோற்சவம் காலை 5.30 மணி தொடக்கம் 8.30 மணி வரையும்,கொடியிறக்கம் மாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரையும் ஒளிபரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## 2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து

# அரசியல் ஆட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி

**கொழும்பு, ஓக. 18**

**'அரசியல் சமரில் ஈடுபட்டு சிறிகொத்தவை கைப்பற்றுவதற்கு நாம் தயாரில்லை. எனவே, தலைமைப் பதவியை ஏற்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி சஜித் பிரேமதாசவுக்கு அழைப்பு விடுக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அக்கட்சி உறுப்பினர்களுக்கு அரசியல் எதிர்காலம் என்பது இருக்காது' என்று ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல மாவட்ட வெற்றி வேட்பாளர் நளின் பண்டார தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்றுக் காலை ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களின் ஆதரவும், வாக்கு வங்கியும் ஐக்கிய மக்கள் சக்தியின் வசமே இருக்கின்றது. பொதுத்தேர்தலில் இதனை நாம் உறுதிப்படுத்தினோம். எனவே, ரணில் அணியினர் இனியாவது உறுதியான தொரு தீர்மானத்தை எடுக்கவேண்டும். அவ்வாறு இல்லா விட்டால் ரணிலுடன் இருக்கும் உறுப்பினர்களுக்கு மாகாணசபைத் தேர்தலில்கூட வெற்றிபெறமுடியாத நிலை ஏற்படும்.

முடியுமானால் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று காட்டுமாறு ரங்கே பண்டார, அகிலவிராஜ், வஜிர உள்ளிட்டோருக்கு சவால் விடுக்கின்றோம். முடியாது. இனி அவர்களால் பிரதேச சபைத் தேர்தலில்கூட வெற்றி பெறமுடியாது.

ஆகவே, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவியை ஏற்குமாறு சஜித்துக்கு ரணில் அணியினர்தான் வலிந்து அழைப்பு விடுக்க வேண்டும். அவ்வாறு விடுக்கப்படும் அழைப்பில்தான் அவர்களின் அரசியல் எதிர்காலம் தங்கியுள்ளது. நாம் வலிந்துசென்று பதவியைக் கேட்கப்போவதில்லை. ஐக்கிய மக்கள் சக்தியாக முன்நோக்கி பயணிப்போம். ஐ.தே.கவின் தலைமைப்பதவி வழங்கப்படுமானால் அதனை சஜித் ஏற்று கூட்டாக பயணிக்கக் கூடியதாக இருக்கும். 2024ஆம் ஆண்டு முற்பகுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து எமது அரசியல் நகர்வுகள் இடம்பெறும். இன்னும் இரண்டு மாதங்களில் சஜித்தின் நேரடி பங்களிப்புடன் கீழ்மட்ட அரசியல் இயந்திரம் கட்டியெழுப்பப்படும்' என்றார். (ம-44)

---

## புதிய அரசமைப்பில் அனைவருக்கும் ஒரே சட்டம்

### விமல் வீரவன்ச தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 18

நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் ஒரே சட்டம் என்பதன் அடிப்படையிலேயே புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் மாற்றியமைக்கப்படவுள்ளன. மேலும் புதிய அரசியலமைப்புக்கு ஏற்றவாறு நாட்டை அபிவிருத்தி நோக்கி கொண்டு செல்ல வேண்டும்.

இதற்கு பொதுத் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அனைவருக்கும் ஒரே சட்டம் என்ற அடிப்படையில் சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்றார். (ஐ)

---



## மருத்துவர் பற்றாக்குறை: முல்லையில் போராட்டம்

கொழும்பு, ஓக. 18

முல்லைத்தீவு மாவட்ட பொதுமருத்துவமனையில் காணப்படும் மருத்துவர் ஆளணிப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யக்கோரி முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையின் நலன்புரிச் சங்கம் மற்றும், அபிவிருத்திச்சங்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளான பொதுமக்களும் பங்கேற்றிருந்தனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் 60 பேருக்குரிய மருத்துவ ஆளணிகள் தேவைப்படுகின்ற நிலையில், தற்போது வெறுமனே 27 மருத்துவர்களே பணியாற்றுகின்றனர் என்றும் இதனால் நோயாளர்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கின்றனர் என்றும் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களால் தெரிவிக்கப்பட்டது. எனவே குறித்த மருத்துவ ஆளணி வெற்றிடங்களை உரியவர்கள் பூர்த்தி செய்து தரவேண்டும் எனக் கோரிக்கையும் விடுக்கப்பட்டது.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்டச் செயலரின் பிரதிநிதியாக ஆர்ப்பாட்ட இடத்திற்கு வருகைதந்த முல்லைத்தீவு மாவட்டச் செயலக பிரதம கணக்காளரிடம் சுகாதார அமைச்சுக்கான மற்றும் மாவட்டச் செயலருக்கான மனுக்கள் கையளிக்கப்பட்டன. போராட்டத்தில் கலந்திருந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், மற்றும் வினோ நோகராதலிங்கம் ஆகியோரிடமும் மனுக்கள் கையளிக்கப்பட்டன.

முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன், க.சிவநேசன், கரைதுறைப்பற்று பிரதேசசபை தவிசாளர் க.தவராசா, கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான, சி.லோகேஸ்வரன், த.அமலன், தி.இரவீந்திரன், க.விஜிந்தன் ஆகியோரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். (ம-246)

---

## 7சங்கிலி, தாலிக்கொடி நல்லூரில் 'அபேஸ்'

யாழ்ப்பாணம், ஓக. 18

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூரான் தேர்த்திருவிழாவான நேற்றைய தினம் ஆலயத்துக்கு வருகை தந்த பக் தர்களின் நகைகள் அபகரிக்கப்பட்ட 8 சம்பவங்கள் இதுவரை பதிவாகியுள்ளன என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

7 தங்கச் சங்கிலி, ஒரு தாலிக்கொடி என எட்டுத் திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்த முறைப்பாடுகளுக்கு அமைய வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ம-25)

---

## 73 ஆண்டுகளுக்குப் பின்னர்

# ஐ.தே.க. இல்லாமல் நாடாளுமன்ற அமர்வு

கொழும்பு, ஓக. 18

இலங்கையின் 9ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் எதிர்வரும் 20ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. பிரதம அமைச்சர் மஹிந்த ராஜபக்ச, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் உட்பட நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள 225 உறுப்பினர்களில் 223 பேர் அன்றைய தினம் சபை அமர்வில் பங்கேற்கவுள்ளனர்.

எமது மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன தேசியப் பட்டியலுக்கான உறுப்பினர் விவரங்களை வழங்காததாலேயே 223 பேர் முதலாவது அமர்வில் கலந்துகொள்ளவுள்ளனர். முன்னாள் பிரதமர் அமரர் டி.எஸ்.சேனாநாயக்க தலைமையில் 1946ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி 1947ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைத்தது.

அதன் பின்னர் 1952, 1956, 1960, 1965, 1970, 1977, 1989, 1994, 2000, 2001, 2004, 2010, 2015 மற்றும் 2020களில் நடைபெற்ற தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிட்டுள்ளது. இதில் 8 தேர்தல்களில் அக்கட்சி வெற்றிபெற்றுள்ளது. 1956ஆம் ஆண்டுதான் பெரும் தோல்வி ஏற்பட்டது. இருந்தாலும் நாடாளுமன்றத்துக்கு எட்டுப் பேர் தெரிவாகினர்.

எனினும், இம்முறைதான் அக்கட்சியால் தேர்தல் மூலம் ஓர் ஆசனத்தைக்கூட வெல்லமுடியாமல்போனது. தேசியப்பட்டியல் ஊடாகவே ஓர் ஆசனம் கிடைத்துள்ளது. எனவே, இலங்கையில் பழமையான அரசியல் கட்சிகளுள் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சி இல்லாமல்கூடும் நாடாளுமன்ற தொடராக இத்தொடர் அமையவுள்ளது. (ம-44)

---

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற செயலாளர் அழைப்பு

கொழும்பு, ஓக.18

நாடாளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாக உள்ள நிலையில், அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமர்வில் கலந்துகொள்ளுமாறு நாடாளுமன்ற செயலாளர் தம்மிக்க தசநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

9ஆவது நாடாளுமன்றத்துக்குத் தெரிவான இதுவரை வர்த்தமானியின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 223 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் எங்கள் சக்தி மக்கள் கட்சி ஆகியன இதுவரை தமது தேசியப்பட்டியல் உறுப்பினரைத் தெரிவுசெய்யாமை காரணமாகவே 223பேருக்கு இந்தக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ரி3)

## இன்றைய நாள்

**மேடம்:** எதிர்பார்க்கும் விஷயங்கள் வெற்றியடையும் நாள். சுப நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பெரிய பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். நீண்டகால நோயின் தீவிரம் குறையும்.

**இடபம்:** புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும் நாள். குடும்பத்தில் அமைதி நிலவும். வெளிநாடுகளில் வசிப்பவர்களுக்கு நிம்மதி கிடைக்கும். வழக்குகளை நீங்களாகத் தொடுக்க வேண்டாம். சுபச்செலவு உண்டு.

**மிதுனம்:** அக்கம் பக்கத்தினரை அனுசரித்து போக வேண்டிய நாள். அலுவலகத்தில் உங்களை யாருடனும் ஒப்பிட வேண்டாம். வியாபாரத்தில் போட்டிகள் காரணமாக லாபம் குறையும்.

**கடகம்:** வாகன வகையில் ஆதாயம் உண்டாகும் நாள். மாமன் மூலம் மன நிறைவு பெறுவீர்கள். வெளிநாட்டிலிருந்து நற்செய்தி கிடைக்கும். பணியாளர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை அமையும்.

**சிம்மம்:** சிரமம் ஏற்பட்டு மீளும் நாள். செய்யும் முயற்சிகளில் முன்னேற்றம் அடைவீர்கள். விசா தொடர்பான நல்ல செய்தி வரும். குடும்பத்தில் புதுநபர் வருகை உண்டு.

**கன்னி:** காதலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மகிழ்ச்சியான நாள். மனதில் நிம்மதி சூடும். தம்பதியர் ஒற்றுமை நல்ல முறையில் இருக்கும். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**துலாம்:** கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றும் நாள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். மேலதிகாரியிடம் பாராட்டு பெறுவீர்கள். பெண்களுக்கு சிறிய மனவருத்தம் ஏற்படும்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்கும் நாள். நண்பர்களுக்காக செலவு செய்வீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். வழக்குகளின் போக்கு சாதகமாக இருக்கும்.

**தனுசு:** நல்லவர்கள் யார் என்பதை கண்டறியும் நாள். பணவரவு சிறிதளவே திருப்தி தரும். சக பணியாளர்களின் விமர்சனங்களைப் பொருட்படுத்த வேண்டாம்.

**மகரம்:** பழைய சிக்கலைத் தீர்க்கும் நாள். பெண்களுக்குப் புதுப் பொருள் வந்து சேரும். வியாபாரத்தில் வேலையாள்களை மாற்றுவீர்கள். பணியாளர்கள் நினைத்தது நிறைவேறும்.

**கும்பம்:** பழைய ஏமாற்றங்களை மறக்கும் நாள். தொழிலில் ஈடுபாடு அதிகரிக்கும். தந்தை வழி உறவினர்களால் ஏற்பட்ட சிரமம் தீரும். சொத்துத் தகராறுகள் அகலும்.

**மீனம்:** குழந்தைகளால் மகிழ்ச்சியடையும் நாள். அரசு அதிகாரிகளின் உதவியால் சில வேலைகளை முடிப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரம் செழிக்கும்.

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த நடவடிக்கை



கொழும்பு, ஓக.18

கொரோனா வைரஸ் காரணமாக தடைப்பட்டிருந்த சுற்றுலா ஏற்றுமதி மற்றும் நிர்மாண நிலையங்களை முறையாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என சுற்றுலா தொழிற்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இலங்கை முதலீட்டு சபையின் கட்டுநாயக்க வலய அலுவலகத்தை பார்வையிட்ட பொழுதே அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்தார். தடைப்பட்டுள்ள ஆடை ஏற்றுமதியை முறையாக முன்னெடுப்பது தொடர்பில் வெளிநாடுகளுடன் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ரி1)

# நாளைமறுதினம் வரை ஐ.தே.கவுக்கு காலக்கெடு

கொழும்பு, ஓக. 18

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அபே ஜனபல கட்சி என்பவற்றுக்கு உரிய, தேசியக் பட்டியல் உறுப்பினர்களின் பெயர்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பெயரிடாவிட்டால், அந்தக் கட்சிகளுக்குரிய ஆசனங்களை வெறுமையாக்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக திசநாயக்க தெரிவித்துள்ளார். அத்துடன், நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள நிலையில், சிறைத்தண்டனை அனுபவித்து வரும் உறுப்பினர்களான பிரேமலால் ஜயசேகர, சிவனேசதுறை சந்திரகாந்தன் ஆகியோர், நீதிமன்றத்தின் அனுமதியுடன் நாடாளுமன்றத்துக்கு வருகைத் தரலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## சிறப்புச் சொற்பொழிவு

சிறுப்பிட்டி, ஓக.18

யாழ்ப்பாணம் நீர்வேலி சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாக தம்பிரான் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு தினமும் மாலை 6 மணிக்கு சிறப்புச்சொற்பொழிவு நடைபெற்று வருகிறது.

இன்று செவ்வாய்க்கிழமை சிவநெறிச்செம்மல் சைவசின்மயர் நித்தியபாபுதரன் "வாழ்வதே வழிபாடு " என்னும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## செல்வச்சந்நிதியானுக்கு நாளை கொடியேற்றம்

வடமராட்சி, ஓக. 18

வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் 15 நாள்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் முதலாம் திகதி காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும், 2 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## போதைப்பொருளுக்கு அடிமையானால் புனர்வாழ்வு

கொழும்பு, ஓக.18

நாட்டில் குற்றச்செயல்களைக் குறைக்க சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பது முக்கியம் என பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த தாவது;

சிறைச்சாலைகளில் இருந்து முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் திட்டமிட்ட குற்றங்களுக்கு எதிராக எதிர்வினையாற்றக்கூடிய திறமைமிக்க அதிகாரிகளை சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் பொலிஸ் விஷேட அதிரடிப் படை ஆகியவற்றுக்கு நாம் நியமித்துள்ளோம். போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளோர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் செயற்பாடுகளை அதிகப்படுத்துவதற்காக பல்வேறு முன்னெடுப்புக்களை நாம் மேற்கொண்டு வருகின்றோம். இதற்கமைய 1,000 பேருக்கு புனர்வாழ்வு அளிக்கும் வசதிகளைக் கொண்ட விஷேட நிலையம் ஒன்று நிட்டம்புவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. 2,000 பேருக்கு புனர்வாழ்வு அளிக்கும் வசதிகளைக் கொண்ட கட்டடம் ஒன்று வீரவில பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ளது என்றார்.

இதேவேளை சிறைச்சாலைகளிலிருந்து செயல்படும் போதைப்பொருள் கடத்தலை இல்லாமல் ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் அவர் விளக்கமளித்தார். (ஐ)

# சுகாதார நடைமுறைகளுடன் செயற்படும் உலகின் முதல் தேயிலை தொழிற்சாலை

### தேயிலை தொழிற்சாலைக்கு தர நிர்ணயச் சான்றிதழ்

கொழும்பு, ஓக.18

கொரோனா வைரஸைத் தடுப்பதற்காக பரிந்துரைக்கப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தேயிலை உற்பத்தி செய்யும் உலகின் முதல் தேயிலை தொழிற்சாலை என்ற பணியக தர நிர்ணயச் சான்றிதழை இலங்கைத் தேயிலை தொழிற்சாலை ஒன்று பெற்றுள்ளது.

ஹற்றன் - கொட்டகலை மவுண்டன் வர்னன் தேயிலை தொழிற்சாலையே இந்தச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டுள்ளது.

இலங்கை தர நிர்ணய பணியகம் பரிந்துரைத்த பொருத்தமான சுகாதார ஆலோசனைகளுடன் தேயிலை கொழுந்து பறிப்பது முதல் தேயிலை தூள் உற்பத்தி செய்யப்படுவது வரை செயற்படுத் தப்படுகின்றனவா என்பதை இரண்டு மாதங்களுக்கு மேலாக கண்காணித்த பின்னரே இந்த நிலையான சான்றிதழ் வழங்கப் பட்டுள்ளது. (ரி3)



முல்லைத்தீவு மாவட்டத்தின் நெடுங்கேணி தண்டுவான் மாமடுச்சந்தி வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்திற்கு எலி வாகனம் ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. லண்டனில் வசித்து வரும் கந்தப்பிள்ளை திலீபன் என்பவர் மற்றும் அவருடைய நண்பர்களால் இந்த வாகனம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. (ரி-222)

### அரச ஊழியர்களுக்கு 'அரசியல் துன்புறுத்தல்':

# ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு இதுவரை 1,800 முறைப்பாடுகள்

**கொழும்பு, ஓக. 18**

**அரச ஊழியர்களை அரசியல் ரீதியாக துன்புறுத்திய அனைத்து வழக்கு களையும் விசாரணை செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு இதுவரை ஆயிரத்து 800க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதன்படி இந்த ஆணைக்குழு வெள்ளிக்கிழமை மாலை வரை மொத்தமாக ஆயிரத்து 863 முறைப்பாடுகளைப் பதிவுசெய்துள்ளதாக அதன் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் வெளிப்படுத்தியுள்ளார்.**

கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவினால் நிய மிக்கப்பட்ட இந்த விசாரணை ஆணைக்குழுவுக்கு 2015ஆம் ஆண்டுஜனவரி 8ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 16ஆம் திகதிக்கு இடையிலான காலகட்டத்தில் அரசி யல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படும் அரச அதிகாரிகள் மற்றும் அரச நிறுவனங்களின் ஊழியர்கள், ஆயுதப் படைகளின் உறுப்பினர்கள் மற்றும் பொலி ஸார் தொடர்பான முறைப்பாடு களை விசாரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற் கான ஆணையம், குற்றவியல் புல னாய்வுத்துறை, இலங்கை பொலிஸ் துறையின் நிதிக் குற்ற புலனாய்வுப் பிரிவு அல்லது இலங்கை பொலிஸ் துறையின் சிறப்பு புலனாய்வுப் பிரிவு ஆகிய வற்றின் மூலம் அரசியல் பாதிப்புக் குள்ளான வழக்குகளை விசாரிக்க வும் இந்த ஆணையத்துக்கு அறி வுறுத்தப்பட்டுள்ளது.

இந்த விசாரணை ஆணைக்குழு வில் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி உபாலி அபேரத்ன, மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி தயா சந்திரசிறி ஜெயதிலக மற்றும் முன் னாள் பொலிஸ்மா அதிபர் சந்திர பெர்னாண்டோ ஆகியோர் உள்ள டக்கப்பட்டுள்ளனர். அதன்படி இந்த ஆணைக்குழு வெள்ளிக் கிழமை மாலை வரை மொத்தமாக ஆயிரத்து 863 முறைப்பாடு களைப் பதிவு செய்துள்ளதாக அதன் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் வெளிப்படுத்தியுள்ளார். (ம)

## சிறுவனுக்கு திடீர் பார்வையிழப்பு; ஆராய்கிறது சிறப்பு மருத்துவர் குழு

மீரிகமவில் 16 வயது டைய சிறுவனின் திடீர் பார்வை இழப்புக் குறித்து விசாரணை மேற் கொள்ள மீரிகம ஆதார வைத்தியசாலையின் மருத்துவர்கள் அடங்கிய சிறப்புக் குழுவொன்று அரசாங்கத்தினால் நிய மிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 04ஆம் திகதியன்று மீரிகம வைத் தியசாலையிலிருந்து தபால் மூலம் அனுப்பப் பட்ட மருந்துகளை உட் கொண்டபின்னர் இந்தச் சிறுவன் பார்வையை இழந்துவிட்டான் எனக் கூறப்படுகிறது. கால் கை வலிப்பு சிகிச்சைக்காகச் சிறுவன் ஏப்ரல் 3 ஆம் திகதி மீரிகம ஆதார வைத் தியசாலைக்குச் சென்றுள் ளான். அதனைத் தொடர்ந்து கொவிட் 19 தொற்றுநோயின் விளை வாக விதிக்கப்பட்ட ஊர டங்குஉத்தரவு காரணமாக மீரிகம வைத்தியசாலை வட்டாரத்தினர், தமது பரிந்துரைக்கப்பட்ட மருந் துகளை சிறுவனுக்கு தபால்மூலம் அனுப்பியுள் ளனர். இந்த மருந்து களை உட்கொண்ட 14 நாள்களுக்குப் பின்னர் சிறுவன் பார்வையை இழந்து விட்டான் என அவனது பெற்றோர் கூறி யுள்ளனர்.

இந்த நிலையிலேயே தற் போது இது தொடர்பில் விசாரணைமேற்கொள்ள மீரிகம வைத்தியசாலை யின் மருத்துவர்கள் அடங் கியசிறப்புக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே மீரிகம, கலேலியவில் பாதிக்கப் பட்ட சிறுவனின் வீட்டுக்கு சென்றிருந்த மருந்தாக் கல், விநியோக மற்றும் ஒழுங்குபடுத்தல் இரா ஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன்ன, இது தொடர் பில் விசாரணைகள் தொடங்கப்படும் என்று உறுதியளித்தார். அத்து டன் பாதிக்கப்பட்ட சிறுவ னின் கண்பார்வை மீண் டும் கொண்டுவர அரசு தேவையான நடவடிக்கை களை எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ப)

## ஆசிரியைக்குத் தொந்தரவு ஒருவர் கைதாகிப் பிணை!

யாழ்ப்பாணம், ஓக. 18

ஆவரங்கால் பகுதியில் ஆசி ரியை ஒருவருக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் கைதான நபரை 50ஆயிரம் ரூபா பெறுமதியான பிணையில் விடுவித்த மல்லாகம் நீதி மன்ற நீதிவான் ஏ.ஆனந்த ராஜா வழக்கை செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதிக்குத் தவணையிட்டார்.

ஆவரங்காலில் வசித்து வரும் ஆசிரியை ஒருவருக்கு அதே பகுதியைச் சேர்ந்தவ ரும் அருகில் வசிப்பவருமான 45 வயதுடைய நபரே தொடர்ச்சியாகப் பாலியல் தொந்தரவு கொடுத்து வந் துள்ளார். இது தொடர்பில் ஆசிரியை கிராமசேவை யாளர்ஊடாக பிரச்சினையை முடித்து வைக்க முயற்சித்த போதும் அந்த நபர் தொடர்ச் சியாக பாலியல் தொந்தரவு கொடுத்து வந்துள்ளார்.

இது தொடர்பில் பின்னர் அச் சுவேலி பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்யப்பட் டது. அச்சுவேலி பொலிஸார் உரியமுறையில் விசார ணையை முன்னெடுக்காத நிலையில் தொடர்ச்சியாக மன உளைச்சலுக்கு உள் ளான ஆசிரியை காங்கேசன் துறை பொலிஸ் பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சக ரிடம் முறைப்பாடு செய்திருந் தார். முறைப்பாட்டின் பிராகா ரம் கடந்த வெள்ளிக்கிழமை அந்த நபர் கைதுசெய்யப்பட் டிருந்தார். அவரை அன்றை யதினம் மல்லாகம் நீதி மன் றில் முற்படுத்தியபோது 50ஆயிரம் ரூபா பெறுமதி யான பிணையில் விடுவித்த நீதிவான் வழக்கை ஒத்தி வைத்தார். (ம-25)

## யானைகளின் மரணம்: விசாரணைக்கு கால அவகாசம் தேவை என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஓக. 18

ஹபரணை - ஹிரிவடுன - தும்பிகுளம் வனப்பகுதியில் மர்மமான முறையில் உயி ரிழந்த 7 யானைகளின் இறப்புக்கான கார ணங்களை முன்வைப்பதற்கு மேலும் கால அவகாசம் அவசியம் என வன உயிர்கள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சீ.பி.ரத் னாயக்க தெரிவித்துள்ளார்.

காட்டு யானைகளின் இறப்பு தொடர்பான பல சம்பவங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக நேற்றுமுன்தினம் அமைச்சர் வடமத்திய மாகாணங்களுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார். மேலும், எதிர்காலத்தில் வனவிலங்கு மற்றும் கால்நடை மருத்துவர்களை ஊக்கு விக்கும் வகையிலான பல சிறப்புத் திட்டங் கள் அறிமுகப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார். (ம)

## 19ஆவது திருத்தத்தை முழுமையாக நீக்குக!

### சுரேன் ராகவன் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 18



அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை முழுமையாக நீக்க வேண்டும் என்று வடக்கு மாகாண முன்னாள் ஆளுந ரும் பொதுஜன பெரமுனவின் தேசி யப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பி னருமான சுரேன் ராகவன் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

19ஆவது திருத்தமானது இலங்கை அரசாங்கத்தை யும் ஆட்சியிலிருக்கும் அரசையும் சாய்த்து வீழ்த்தி விடும் நிலையை ஏற்படுத்தியது. 19ஆவது திருத்தத்தை உருவாக்கியமை தவறல்ல. ஆனால், அதனை உரு வாக்கிய விதம், உருவாக்கப்பட்ட வேகம்தான் இன்று நாட்டில் பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது - என் றார். (ம)

## கசிப்பு வடித்தவர் கைது

ஏழாலை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து கசிப்பு வடித்த நபர் கைதுசெய்யப்பட் டுள்ளார் என காங்கேசன் துறை விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் இருந்து 1.5 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

ஏழாலைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து கசிப்பு வடிப்பதாக காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலி ஸாருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றிருந்தது. பொலிஸார் வருவகின்றமை குறித்து அறிந்து கொண்ட நபர்கள் காய்ச்சிய கசிப்பு, மற்றும் கோடாவை நிலத்தில் ஊற்றி யுள்ளனர். எனினும் பொலி ஸார் 1.5 லீற்றர் கசிப்பை சான்றுப் பொருளாகக் கைப் பற்றியுள்ளனர். கைதுசெய் யப்பட்ட நபர் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் ஒப்ப டைக்கப்பட்டுள்ளார். (ம-25)

## தேசியவாத சித்தாந்தத்தில் அனைவரும் சிந்தியுங்கள்!

### நீதி அமைச்சர் அலி சப்ரி அழைப்பு

கொழும்பு, ஓக. 18

எல்லோரும் இனவெறி அரசி யல் சித்தாந்தங்களுக்கு அப் பால் சென்று அதற்கு பதிலாக ஒரு தேசியவாத அரசியல் சித் தாந்தத்தில் செயற்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

தீவிரவாதம் மற்றும் இன வெறியைப் பரப்புவதற்குப் பதி லாக அனைத்துச் சமூகங்க ளும்சகோதரத்துவத்தின்மூலம் ஒன்றுபட வேண்டும். அனைத்து மக்களும் எந்தவிதமான பாகு பாடும் இன்றி வாழும் சூழலை உருவாக்க வேண்டும். எல்லோ ரும் இனவெறி அரசியல் சித் தாந்தங்களுக்கு அப்பால் சென்று அதற்குப் பதிலாக ஒரு தேசியவாத அரசியல் சித்தாந் தத்தில் செயற்பட வேண்டும்.

ஆனால் ஒருசிலர், அரசாங்கத் தைப் பற்றி பல்வேறு தவறான கருத்துக்களைப் பரப்புவதன் ஊடாக மக்களைத் தவறாக வழி நடத்த முயற்சிக்கின்றனர். எனி னும் அவை அனைத்தும் மக்க ளால் நிராகரிக்கப்படுகின்றன. ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜ பக் ஷ மற்றும் முழு அரசாங்க மும் எந்தவிதமான பாகுபாடுக ளும் இன்றி அனைத்து சமூக மக்களும் கண்ணியத்துடன் வாழக்கூடிய சூழலை உரு வாக்க முயற்சித்து வருகின்ற னர் - என்றார். (ம)

# மாணவனுக்கு கொரோனா

கொழும்பு, ஓக. 18

ராஜாங்கனை யாய 5 நவோத்யா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அந்த மாணவன் இதற்கு முன்னர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்த நிலையில் குணமடைந்த பின்னர் இரண்டாவது தடவையாக கொரோனாத் தொற்றுக்கு ஆளாகியுள்ளார் என மருத்துவ பரிசோதனைகளில் உறுதியாகியுள்ளது. அத்தோடு, மாணவனுக்கு தொற்றிய கொரோனா அடுத்தவர்களைப் பாதிக்காது என்று தெரிவித்த சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தினர். மாணவனை 14 நாட்கள் வீட்டில் சுயதனிமைப்படுத்துமாறு கூறி வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்கு அனுப்பியுள்ளனர். (ப)

# 42,000 மெற்றிக்தொன் நெல் கிளிநொச்சியில் அறுவடை

## பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தகவல்



கிளிநொச்சி, ஓக. 18

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு சிறுபோகத்தில் 42 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது என்று மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டுக்குரிய சிறுபோக செய்கை தொடர்பில் மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அண்மையில் கருத்து தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும் நீர்த்தேக்கமாகக் காணப்படுகின்ற இரணைமடுக்குளம் உள்ளிட்ட நடுத்தர மற்றும் சிறுகுளங்களில் மேற்கொள்ளப்பட்ட 2019, 2020ஆம் ஆண்டுக்கான கால போக அறுவடையைத் தொடர்ந்து இவ்வாண்டுக்கான சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் நிறைவு பெற்றுள்ளன. அதாவது இரணைமடுக்குளம், கல்மடுக்குளம், அக்கராயன்குளம், புதுமுறிப்புக்குளம், வன்னேரிக்குளம், கரியாலை நாகபடுவான் குளம், குட முருட்டிக் குளம் உள்ளிட்ட நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் சிறு நீர்ப்பாசனக் குளங்கள் என்பன வற்றின் கீழ் சுமார் 8ஆயிரத்து 688 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் சிறு போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் நிறைவு பெற்றுள்ளன. இதன்மூலம் ஏறத்தாழ 42 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்செய்கையைப் பொறுத்தளவில் பெரிய மற்றும் நடுத்தரக்குளங்களின் கீழ் 8 ஆயிரத்து, 592 ஹெக்ரெயரிலும் சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் 96 ஹெக்ரெயரிலுமாக மொத்தமாக 8ஆயிரத்து 688 ஹெக்ரெயர் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் நிறைவு பெற்றுள்ளன. அறுவடைகள் மூலம் சுமார் 42 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதேபோல் மறு வயல் பயிர்ச் செய்கைகள் பல்வேறு செயற்திட்டங்களினூடாக ஊக்குவிக்கப்பட்டு சுமார் 1300 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார்.

கடந்த கால போகத்தின் போது 23 ஆயிரத்து 466 ஹெக்ரெயர் நிலப் பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (ப)

# சிறைச்சாலையின் பொறுப்பதிகாரிக்கு அதிரடி இடமாற்றம்

அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையின் பொலிஸ் விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறைச்சாலைக்குள் தடைசெய்யப்பட்ட பொருள்களைக் கொண்டுசெல்வதற்கு இடமளித்ததாகக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து. இந்த இடமாற்றம் செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளில் நால்வர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் சிலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ப)

## வடக்கு கல்வி அமைச்சின் முன்னால்


# யாழில் ஆசிரியர் ஒருவர் தன்னந் தனியே போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 18

வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு முன்பாக நேற்றையதினம் ஆசிரியர் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டார். கல்வி அமைச்சின் பிரதான நுழைவாயிலில் தனது கோரிக்கை எழுதப்பட்ட பதாகையை ஏந்தியவாறு அந்த ஆசிரியர் போராடினார்.

புத்தூர் மடிகே பஞ்சசீக வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரியராகப் பணியாற்றி வரும் ஆசிரியர் ஒருவரே தன்னந்தனியாக இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டார். தனது தகைமைக்கு ஏற்றவாறு, 6ஆம் தரத்துக்கு மேல் உள்ள மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு தன்னை நியமிக்குமாறு கோரி அவர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

இந்தப் போராட்டம் தொடர்பில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, சம்பவம் தொடர்பில் இதுவரை தான் அறிந்திருக்கவில்லை - என்றார். (ப)



# பாலம் சீரமைக்கப்படாததால் போக்குவரத்தில் பெரும் பாதிப்பு

கிளிநொச்சி, ஓக.18

பருவ மழையின் போது உடைந்த பாலம் ஒன்று இதுவரை சீரமைக்கப்படாதுள்ளதால், அதனூடாக போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட கனகபுரம் ஒன்பதாம் பண்ணை வீதியில் அமைந்துள்ள பாலமே இவ்வாறு கடந்த பருவ மழை காலத்தில் உடைந்துள்ளது. இதனால் அவ் வீதி வழியாக சிலஇடங்களுக்குச்செல்லும் பொதுமக்கள் பல கிலோமீற்றர் தூரம் சுற்றிப் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதோடு, தங்களுக்குத் தேவையான கட்டுமானப் பொருள்களை கூட வாகனங்களில் ஏற்றி வர முடியாத நிலையில் உள்ளனர். எனவேமக்களுடைய நெருக்கடி நிலையை உணர்ந்து இந்தப் பாலத்தை விரைவாகச் சீரமைத்து தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-214)



# பச்சிலைப்பள்ளி சபையின் நிதியில் முன்பள்ளிக் கட்டடம்

கிளிநொச்சி ஓக 18

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபையால் முன்பள்ளிக் கட்டடம் அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் உள்ள வறிய மாணவர்களின் நலன் கருதி அவர்களின் ஆரம்பக் கல்வியை மேம்படுதும் விதமாக நவீன கற்றல் முறைகளுடன் கூடிய ஒரு மாதிரி முன்பள்ளியாக சபை நிதியில் 25 இலட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்ததாவது;

பிரதேச மக்களின் நீண்டகால எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் இந்தப் பணிகள் இடம்பெறுகின்றன. பிரதேசத்தின் ஆரம்பப் பிரிவு மாணவர்களை நவீன உலகின் போட்டிச் சூழலுக்கு ஏற்ற வகையில் தயார் செய்து பாடசாலைக்கு அனுப்புவதன் மூலம் பிரதேசத்தின் கல்வி மட்டத்தை உயர்த்த முடியும் - என்றார். (ப-6)

# யாசகரின் வங்கிக் கணக்கில் 14 கோடி ரூபா!

கொழும்பு, ஓக.18

இரத்மலான பிரதேசத்தில் யாசகத்தில் ஈடுபடும் நபரொருவரின் வங்கிக் கணக்கில் 14 கோடி ரூபா வைப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 65 வயதான இந்த யாசகர், போதைக்கு அடிமையானவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதைப்பொருள் வர்த்தகரான மேர்வின் ஜனா என்பவரால் சம்பாதிக்கப்பட்ட பணமே, குறித்த யாசகரின் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்படுகிறது.

இந்த போதை வர்த்தகர், பூஸா சிறையில் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளாரென தகவல்கள் தெரிவிக்கின்றன. சந்தேகநபர் கடந்த காலங்களில் இவ்வாறான பெருமளவு பணத்தை, பல்வேறு நபர்களின் வங்கிக் கணக்குகள் ஊடாக வைப்பிலிட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இதேவேளை, மேர்வின் ஜனாவின் மனைவி, சகோதரி உள்ளிட்டவர்கள் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட நிலையில், பல தடவைகள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டவர்கள் என்றும் இவர்களின் வங்கிக் கணக்குகளில் 37 கோடி ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ப)

# அரச பணியாளர் ஹெரோய்னுடன் கைது

கொழும்பு, ஓக.18

அரச பகுப்பாய்வு திணைக்களத்தின் பணியாளர் ஒருவர் போதைப்பொருளுடன் அத்துருகிரிய பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த நபரிடமிருந்து 18 கிராம் ஹெரோய்ன் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது எனவும், விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரி3)

# வடக்கில் நுண்கடன் திட்டத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்

## அமைச்சர் செஹான் சேமசிங்க உறுதி



கொழும்பு, ஓக. 18

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நுண்கடன் திட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும். இப்பிரதேச மக்கள் பொருளாதார ரீதியில் சுயமான முன்னேற்றமடைவதற்கு சுய கைத்தொழில் முறைமைகள் அறிமுகப்படுத்தப்படும் என சமுர்த்தி, மனைப்பொருளாதார , நுண்நிதி சுயதொழில், தொழில் அபிவிருத்தி மற்றும் கீழ் உழைப்பு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் பொதுஜன பெரமுனவுக்கு இம்முறை ஆதரவு வழங்கி தமிழ் அரசியல் கட்சிகளைப் புறக்கணித்துள்ளார்கள். கடந்த அரசாங்கத்தின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட வில்லை.

மாகாண சபை முறைமை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு எவ்வகையான நன்மைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளன என்பது ஆராயப்பட வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தில் அதிகாரத்தில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி மற்றும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கவும் கவனம் செலுத்தவில்லை.

பலவீனமான அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் நுண்கடன் திட்டம் பெரிதும் பாதிப்பினை ஏற்டுத்தியுள்ளது. கடன் சுமைகளினால் பாதிக்கப்பட்ட பலர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அதே சமயம் நிதி நிறுவனங்களி னால் உளவியல் ரீதியிலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தில் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. நுண்கடன் திட்டங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மத்திய வங்கி ஊடாக நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் பொருளாதார ரீதியில் சுயமாக முன்னேற்றுவதற்கான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். சுய கைத்தொழில் துறையை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ப)

**திருத்தி வாசிக்கவும்**

16.08.2020 ஞாயிற்றுக்கிழமை உதயன் பத்திரிகையில் 4ஆம் பக்கத்தில் வெளிவந்த "ஆலோசனைச் சேவைப் பிரிவுக்கான" வளவாளர்கள் தேவை. என்ற விளம்பரத்தில் எம்மால் காரியாலய தொலைபேசி இலக்கம் தவறுதலாக கொடுக்கப்பட்டுள்ளது. காரியாலய தொலைபேசி இலக்கம் **021 222 3668** என திருத்தி வாசிக்கவும்.

விளம்பரதாரர்
யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

**மணமகன் தேவை**

இந்து உயர் குடும்பத்தைச் சேர்ந்த 1990 அச்சுவினி 4ஆம் பாதம், கிரக பாவம் 31, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் **"தாவர போசன"** மணப்பெண்ணுக்கு உள்நாட்டில் மணமகனை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு:- 077 575 9514

**கம்சப்பிரியா இசைக்கல்லூரி**

வயலின், வீணை, புல்லாங்குழல், ஹார்மோனியம், வாய்ப்பாட்டு, ஓர்கன், கிற்றார் அனைத்தும் கற்பிக்கப்படுகின்றன. புதிய மாணவர்கள் இணைந்து கொள்ளலாம்.

இல.30, கிருஷ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

-நிர்வாகி

**கார் விற்பனைக்குண்டு**

**VEZEL RS 2017**

077 593 8090

**மன்னார் மாவட்ட அடம்பன், பேசாலை பிரதேச வைத்தியசாலைகளில் தரவுகளை பதிவேற்றம் செய்வதற்கான இரண்டு தரவு நிரற்படுத்துநர்களை ஆட்சேர்ப்பு செய்தல் - 2020**

மன்னார் மாவட்டத்தில் ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையங்களை மேம்படுத்தும் திட்டத்தினுடாக (PSSP) தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைக்கான தரவுகளை கணினிகளில் இணைய வழிகளில் பதிவேற்றம் செய்வதற்காக இரண்டு தரவு நிரற்படுத்து நர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது

- இந்த பதவி நிரந்தரமற்றது.
- இந்த பதவிக்குரிய பதவிக்காலம் ஆகக்கூடியது 6 மாதங்கள்.
- தெரிவு செய்யப்படுபவர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு பொறுப்பு கூறுபவராக இருப்பார்.
- ஒரு நாளுக்கு 500 ரூபா மட்டும் சம்பளமாக வழங்கப்படும்.
- ஒரு மாதத்தில் ஆகக்கூடுதலாக 20 நாட்கள் வேலை செய்ய முடியும்.

**இந்த பதவிக்குரிய தகைமைகளும், அனுபவமும்.**

1. NVQ நிலை 3/4/5 பாடநெறியில் தகுதி பெற்றிருக்க வேண்டும். அல்லது பயிற்சியாளராக இருக்கவேண்டும். அல்லது அதற்கு சமனான தகுதி ICT இல் பெற்றிருக்க வேண்டும்.
2. சாதாரண தரத்தில் கணித பாடத்திலும் ஆங்கிலத்திலும் சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும்.
3. பதவிக்காக தெரிவு செய்யப்படும் வைத்தியசாலைக்கு பொருந்தக்கூடிய வகையில் சிங்களத்தில் அல்லது தமிழில் சரளமாக பேசக்கூடியவராக இருக்க வேண்டும்.
4. ஒரு அரச நிறுவனத்தில் தரவு நிரற்படுத்துநர் ஆக வேலை செய்திருத்தல் மேலதிகமான தகைமையாககொள்ளப்படும்.

இதில் ஆர்வமுள்ளவர்கள் உங்களின் விண்ணப்பத்தை உறவினர் அல்லாத இருவரின் தொடர்பு விபரங்களுடன் கூடிய விபரமான சுயவிபரங்களுடன் **சுகாதார சேவைகள் பணிப் பாளர் மன்னார் அவர்களுக்கு முகவரியிட்டு 2020 ஆகஸ்ட் 28ஆம் திகதியன்றோ** அல்லது அதற்கு முன்னரோ **பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும். தயவு செய்து தபாலுறையின் இடப்பக்க மேல் மூலையில் விண்ணப்பித்துள்ள பதவியினைக் குறிப்பிடவும்.** (தெரிவு செய்யப் பட்ட பரீட்சார்த்திகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்)

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைமன்னார்.**

தொலைபேசி இல : 023-2222916 /023 -2223114 தொலைநகல் : 023-2251101

**ராஜ் ஜுவல்லர்ஸ்**
**அடகு பிடிப்பவர்கள்**

**1 பவுண் - 22 கரட்டிற்கு 78,000/=**

**முக்கிய அறிவித்தல்**

01.11.2018 ஆம் திகதிதொடக்கம் 30.09.2019 இதற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வைக்கப்பட்ட அடகுகளை (பற்றுச் சீட்டு இலக்கம் 21000 தொடக்கம் 38 000 வரை) 30.09.2020 ஆம் திகதிக்குள் மீட்டுக்கொள்ளவும். அல்லது தற்போதைய தங்கத்தின் அதிகரித்த பெறுமதிக்கேற்ப வட்டியுடன் சேர்த்து புதுப்பித்துக்கொள்ளலாம். தவறின் 30.09.2020 ஆம் திகதிக்கு பின் அவை விற்பனை செய்யப்பட்டு விடும். பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது.

இல. 31 C ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி
(சந்தைக்கு அருகில்)
021 221 7287, 076 636 1238

**25ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
**றோமாம்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ்**

தோற்றம்
06.11.1947

மறைவு
18.08.1995

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் அப்பாவே!
உங்கள் நினைவுகளில்
மிதக்கின்றோம் அப்பா !

மணற்காடு,
குடத்தனை.
குடும்பத்தினர்.

# விபத்தில் காயம்

மன்னார், ஓக. 18

மன்னார் பெரிய பாலத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிளும் மகேந்திரா வாகனமும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் காயமடைந்தார். ஸ்கூட்டியை மகேந்திரா ரக வாகனம் மோதியதில் ஸ்கூட்டியில் வந்த நபர் படுகாயமடைந்துள்ளார். நேற்று மதியம் இடம்பெற்ற இந்த விபத்தில் காயப்பட்டவர், மன்னார்மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (கு-213)

## என்றும் நெஞ்சைவிட்டு நீங்காத நினைவலைகள்

30ஆவது வருட



உதயம் 18.06.1933

அஸ்தமனம் 20.08.1990

தோலகட்டி, வயாவிளான்

**அமரர் வைத்திலிங்கம் நடராசா**

(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி. கிழக்கு பிரதேசசபை, - அச்சுவேலி)

திதி: 18.08.2020

6ஆவது வருட



உதயம் 02.07.1935

அஸ்தமனம் 27.08.2014

தோலகட்டி, வயாவிளான்

**திருமதி சிவபாக்கியம் நடராசா**

திதி: 21.08.2020

அன்புடனும், பாசத்துடனும், எம்முடன் வாழ்ந்து நாம் சிறப்புடன் வாழ வழிகாட்டி, எம்மை எல்லாம் விட்டு மறைந்த எங்களின் அன்புத் தெய்வங்கள் அப்பா, அம்மாவே ! ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும் எங்களின் இதயங்களில் உங்களின் நீங்காத நினைவலைகளை சுமந்தபடி ஆண்டு தோறும் நல்லூரானின் தீர்த்தக்கரையில் நின்று கொண்டு கண்ணீர் பூக்களினால் உங்களின் பாதங்களுக்கு சமர்ப்பிக்கும் நாங்கள்!

இல. 27/5, மெமோறியல் லேன்,
மானிப்பாய்.
077 995 6974, 021 225 5252
இல. 47/2, சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். 076 528 1737

என்றும் உங்களின் நினைவுகளில்
அன்பு மகன்மார், மகள்மார்,
மருமக்கள் மார், பேரப்பிள்ளைகள்.

---

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹா

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

**மோகன் ஆகாஷ்**



நாற்பத்தைந்து நாள்கள்
ஆயினும் அன்பு முகம்
- மறக்கவில்லை
அருமையான திருமுகத்தை
- மீண்டும்
அன்புடன் காண்பதற்கு
- தவிக்கின்றோம்.

மாமா (கொழும்பு)

---

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**அன்னலட்சுமி சங்கரப்பிள்ளை**



திதி: அமாவாசை

தோற்றம் 16.04.1943

மறைவு 25.08.2014

எம் குடும்ப பாசவிளக்காய் ஒரு கூட்டுக்கிளியாக
எம்மோடு வாழ்ந்து எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாளில்லையம்மா...

"மலரகம்"
கொட்டைக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு.

நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

---

## மரண அறிவித்தல்



பிறப்பு 18 . 05 . 1942

இறப்பு 16 . 08 . 2020

**சந்தியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை சேவியர்**

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை சேவியர் கடந்த 16.08.2020 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஸ்கொலஸ்ரிக்காவின் அன்புக் கணவரும், அனிற்றா, சுபாசினி (மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமை காரியாலயம், பத்தரமுல்ல கொழும்பு) பாசமிகு தந்தையும், ஞானதேவரின் (Consul General, Srilanka Consulate, Karachi, Pakistan) பாசமிகு மாமனும், ஞானபேர்ஜிற்றா, ஞான இன்பன்ற்றாஜ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 16.08.2020 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06

தகவல்:
மகள்

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 13 • 09 • 1937

விண்ணில் 30 • 08 • 2019

**அமரர் ஆறுமுகம் சுப்பிரநாதன்**

(விமானப்படை ஓய்வுநிலை உயர் அதிகாரி)

திதி: 18.08.2020

ஈராறு மாதங்கள் ஆகியும் எம் இதயம்
இன்னும் ஆறவில்லை. என்றும் உங்கள்
அன்பும், பண்பும், பாசமும் எம் வழிகாட்டியாய்
எம் குலதெய்வமாய் என்றும் எம்மோடு
நீங்கள் இருப்பீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய மயிலியற்புலக்
கந்தனை வேண்டுகின்றோம்.

செட்டியார்மடம்,
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## பூபாலசிங்கம் மிதிலா

பிறப்பு 14.11.1987 | இறப்பு 17.08.2020

அளவெட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பூபால சிங்கம் மிதிலா நேற்று (17.08.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பூபாலசிங்கம் செல்வராணி தம்பதிகளின் அன்பு மகளும், நிரஞ்சனா கஹிதரனின் அன்புச் சகோதரியும், கஹிதரனின் அன்பு மைத்துனியும், அக்ஷயன், வருண், தஷ்வின் ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2020) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணேஸ்வரம், அளவெட்டி.
(கருவேப்பிலை ஆரம்ப பாடசாலை அருகாமை)

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:- 077 4729 565, 077 9581 310

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை கனகசிங்கம்

(விரும்பு செந்தமிழ் விரிவுரை வித்தகரும், ஓய்வுநிலை நீர்ப்பாசன அதிகாரியும்)

தண்ணீரூற்று, முள்ளியவளை 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது சிறுப்பிட்டி வடக்கில் வசித்து வந்தவருமாகிய வேலுப்பிள்ளை - கனகசிங்கம் கடந்த (14.08.2020) வெள்ளிக்கிழமையன்று சிறுப்பிட்டி வடக்கில் இறைபதமடைந்தார்.

அன்னார் தண்ணீரூற்றைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், சிறுப்பிட்டி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சபாபதி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அருமை மருமகனும், காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான குமாரையா, வேலாயுதம், சின்னத்துரை, சிவனேசம், அருட்பிரகாசம் மற்றும் மீனலோசினி, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிறுப்பிட்டி வடக்கைச் சேர்ந்த சபாபதி தங்கராசாவின் (ஓய்வுநிலை அதிபர்) அருமை மைத்துனரும், காலஞ்சென்ற சிவராசா (முன்னாள் அதிபர்) மற்றும் பாலராணி (சிறுப்பிட்டி), ஜெயராஜ் (சட்டத்தரணி - லண்டன்), தவராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனித்தா (முள்ளியவளை), வைத்திய நாதன் (சிறுப்பிட்டி - ஓய்வுநிலை கிராம அலுவலர்), நளினி (லண்டன்), சுபோதினி (லண்டன்), கௌரி, காண்டீபன், காகுந்தன், கஜமுகன், கௌந்தி, கௌசலா ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷ்ணராஜாவின் (சுவிஸ்) பெரிய தந்தையும் கஜந், வினோஜ், ஜஞ்சித், ஆர்த்திகா, சாருஜா (முள்ளியவளை), நிரோஷினி (லண்டன்), நிரஞ்சன் (லண்டன்), நிஷாந்தன் (சிறுப்பிட்டி), நிதர்ஷன் (சுவிஸ்), சங்கர்சனன் (லண்டன்), சிவேதினி (லண்டன்), யாதவி (லண்டன்), நிவேதன் (லண்டன்), மகிபன் (லண்டன்), சரண்யன் (லண்டன்), கஜேந்திரன் (லண்டன்), மதுமதி (லண்டன்), சிந்துபிரியா (சிறுப்பிட்டி), கிரிஷாந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் சாருகன் (லண்டன்), சுபீச்சா (லண்டன்), பானுஜன் (லண்டன்), வியோனா (லண்டன்), தொஷாணி (சிறுப்பிட்டி), சேயோன் (சுவிஸ்), தீரன் (சுவிஸ்), ஆதீஷ்யன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஊற்றங்கனா விநாயகர் வற்றாப்பளை கண்ணகை அம்மன் அடியவரும் புராணபடன வித்தகருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிறுப்பிட்டி வடக்கில் நாளை (19.08.2020) புதன் கிழமை காலை 08.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் தண்ணீரூற்று இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.



தோற்றம் 10.08.1925 | மறைவு 14.08.2020

சிறுப்பிட்டி வடக்கு,
சிறுப்பிட்டி.

தகவல்:- கந்தையா வைத்தியநாதன்
மருமகன் - சிறுப்பிட்டி
தொலைபேசி இல: 077 735 3339

## திடீர்...

மண்ணெண்ணை வாங்கியதை அவதானிக்க முடிந்தது.

நேற்று மதியம் முதல் நாடளாவிய ரீதியில் மின் துண்டிப்பு ஏற்பட்டது. நேற்று இரவும் மின் துண்டிக்கப்பட்டிருந்தது. அதனால் மக்கள் வீடுகளில் மெழுகுதிரிகள்,மண்ணெண்ணை விளக்குகளையே உபயோகித்தனர். அதனால் கடைகளில் மெழுகுதிரி விற்பனையும், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மண்ணெண்ணை விற்பனையும் களை கட்டியது. (எ)

## ரயிலுடன்...

துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை, ரயில் தண்டவாளத்தில் இருந்து கைபேசியில் உரையாடிக்கொண்டிருந்தபோது ரயிலுடன் மோதி எம்.கே.வி.விஜயரத்ன என்ற 19 வயது இளைஞர் படுகாயமடைந்தார்.

அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அதன்பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பெற்று அன்றைய தினமே உயிரிழந்தார்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மூலம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-9)

## புள்ளி...

பெயர்ப் பலகையில் காணப்பட்ட தமிழ் எழுத்துப் பிழையைச் சீர் செய்துள்ளார்.

அமைச்சில் காணப்பட்ட பெயர் பலகையில் இதுநாள் வரை "விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர விவகார அமைச்சு" என்றே தமிழில் எழுதப்பட்டிருந்தது. அமைச்சர் நாமல் ராஜபக்ச இன்று கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ள நிலையில் "ர"வுக்குப் புள்ளி வைத்து "இளைஞர்" என்ற வாக்கியத்தைச் சரி செய்துள்ளார். (எ)

## மின்சாரம்...

சாலைகளில் தங்கிச் சிகிச்சை பெற்று வந்த நோயாளர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

மின் தடையால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். பெரும்பாலான ஆயுள்வேத வைத்தியசாலைகளில், ஜெனரேற்றர் வசதி இல்லாத நிலையில், நோயாளர்கள் நேற்று மாலை துண்டு வெட்டி வீட்டுக்கு அனுப்பட்டனர்.

இந்தப் பிரச்சினை நீண்டகாலமாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. உரிய தரப்பினர் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

## கூட்டமைப்பு...

ஒன்பதாவது நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நாளைமறுதினம் 20ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. இதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடைபெறக்கூடும். இதன்போது கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் பதவி உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்படலாம்.

2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் கூட்டமைப்பின் பேச்சாளர் பதவி எம்.ஏ.சுமந்திரனிடம் வழங்கப்பட்டிருந்தது. அவர் தெரிவித்த கருத்துக்கள் தேர்தல் பின்னடைவுக்குக் காரணம் என்று பங்காளிக் கட்சிகள் கருதுகின்றன.

இந்த நிலையிலேயே, கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியிலிருந்து சுமந்திரனை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் புளொட் இணைந்து முன்வைக்கவுள்ளன. (ஒ,5)

## வடக்கின்...

தற்போது திருமதி பி.எம்.எஸ். சாள்ஸ் பதவி வகிக்கின்றார். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ச வெற்றி பெற்ற பின்னர், இவர் வடக்கு மாகாணத்துக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார். அதற்கு முன்னர் சுரேன் ராகவன் ஆளுநராகப் பதவி வகித்திருந்தார்.

தற்போது நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்து ராஜபக்சவினர் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைத்துள்ள நிலையில், பல்வேறு பதவி நிலைகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கு மாகாண ஆளுநர் பதவியிலும் மாற்றம் ஏற்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. வன்னி மாவட்ட முன்னாள் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா இந்தப் பதவியில் நியமிக்கப்படுவார் என்று கூறுப்படுகின்றது. இவர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் வியத்மக அமைப்பிலும் அங்கம் வகிக்கின்றார்.

வடக்கு மாகாணத்தில் சிவில் செயற்பாடுகளில் இராணுவத்தினரின் தலையீடுகள் அதிகரித்துள்ளன என்று தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுவரும் நிலையில், இராணுவ முன்னாள் அதிகாரி ஒருவர் ஆளுநராக நியமிக்கப்படலாம் என்ற தகவல் தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளபோதும், அந்த ஒருங்கிணைப்புக் குழுக்களின் இணைத் தலைவராக வடக்கு மாகாண ஆளுநர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் வடக்கு மாகாணத்துக்கு இராணுவ முன்னாள் அதிகாரி ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட்டால், அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் இராணுவத்தின் தலையீடுகள் அதிகரிக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ)

## வடக்கு...

வேலை வாய்ப்புக்காக விண்ணப்பித்திருந்த 2 ஆயிரத்து 346 பேரின் விண்ணப்பங்கள் பல்வேறு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் 117 பேரின் விண்ணப்பங்கள் காத்திருப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரத்து 506 பேரினதும், கிளிநொச்சி மாவட்டத்தில் 127 பேரினதும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 101 பேரினதும், மன்னார் மாவட்டத்தில் 356 பேரினதும், வவுனியா மாவட்டத்தில் 256 பேரினதும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சான்றிதழ் இல்லாமல் இருந்தல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தைக் கொண்டிராமல் இருத்தல், 45 வயதுக்கு அதிகமாக இருத்தல். ஏற்கனவே தொழிலில் இருத்தல், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவராக இருத்தல், கிராம அலுவலர், பிரதேச செயலர் கையெழுத்திடாமல் இருத்தல், பட்டச் சான்றிதழ், பட்டத்துக்கான பெறுபேறுச் சான்றிதழ் இணைக்கப்படாமல் இருத்தல், வெளிநாட்டில் வசித்தல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டு 2 ஆயிரத்து 256 பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. (ஒ,5)

## எங்களுக்கு...

ஆசனத்தில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ பங்கு கோரவுள்ளது.

தேசியப் பட்டியல் ஆசனத்தின் இறுதி இரண்டரை ஆண்டு காலப் பகுதியை தமது கட்சிக்கு வழங்கவேண்டும் எனக் கோரிக்கை முன்வைப்பதற்கு அந்தக் கட்சியின் தலைமைத்துவக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ரெலோவின் தலைமைத்துவக் குழுக் கூட்டம் திருகோணமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது மேற்படி விடயம் ஆராயப்பட்டுள்ளது.

தேசியப் பட்டியல் விவகாரம் காரணமாக தமிழ் அரசுக் கட்சிக்குள் ஏற்கனவே முரண்பாடு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## இருண்டது...

மதியம் 12.35 மணி முதல் பல மணி நேரம் மின் துண்டிக்கப்பட்டிருந்தால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். இரவு 11 மணியளவிலேயே மின்சார வழங்கல் வழமைக்குத் திரும்பியது.

"கெரவலப்பிட்டிய அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட திடீர் உயர் மின் அழுத்தமே இந்த மின் தடைக்குக் காரணம்" என்று மின்சக்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்திருந்தார்.

"நுரைச்சோலை போன்ற ஏனைய மின் உற்பத்தி நிலையங்கள் இயங்கினாலும், மின் இணைப்புக் கட்டமைப்பில் ஏற்பட்ட உயர் மின் அழுத்தமே மின் தடைக்குக் காரணம். அதைச் சீர் செய்யும் பணிகளில் மின்சார சபைப் பொறியியலாளர்களும், தொழில்நுட்பவியலாளர்களும் ஈடுபட்டுள்ளனர். சில மணித்தியாலங்களில் நிலைமை சீராகும்" என்று அமைச்சர் நேற்றுப் பிற்பகல் தெரிவித்த போதும், பல மணி நேரமாக நிலைமை சீரடைய வில்லை.

### அசௌகரியம்

மின் துண்டிப்பால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. அத்துடன் வீதிச் சமிக்ஞைகள் செயலிழந்ததால் பெரு நகரங்களில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

அதேவேளை, மின் துண்டிப்புக் காரணமாக நாட்டின் பல பாகங்களில் நீர் விநியோகமும் பாதிக்கப்பட்டது என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்தது. பல இடங்களில் குறைந்த அழுத்தத்துடன் நீர் விநியோகிக் கப்பட்டுள்ளது.

### குழு நியமனம்

மின் துண்டிப்புத் தொடர்பாக மின்சக்தி அமைச்சின் செயலாளர் உட்பட உயர் அதிகாரிகளுடன் இணைந்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ள மின்சக்தி அமைச்சர், இந்த விடயத்தை ஆராய்வதற்காகக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

மின் துண்டிப்புத் தொடர்பாக ஆராய்ந்து இந்தக் குழு ஒரு வாரத்தில் அறிக்கை சமர்ப்பிக்கும் என்றும், இவ்வாறான சம்பவம் மீள நிகழாமையை உறுதி செய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு கடிதம்

திடீர் மின்வெட்டுத் தொடர்பாக இலங்கை மின்சார சபை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எழுத்து மூலம் அறிவித்துள்ளது. இந்த அறிக்கையை 3 நாள்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

### படிப்படியாக இயல்புநிலை

மின்சார சபைப் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களின் முயற்சிகளை அடுத்து நாட்டில் படிப்படியாக மின் விநியோகம் சீரடைந்தது. இரவு 7 மணியளவில் நாட்டின் 75 சதவீதப் பகுதிகளில் மின் விநியோகம் வழமைக்குத் திரும்பியது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்தது. வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களுக்கு இரவு 7.45 மணியளவில் மின் வழங்கல் வழமைக்குத் திரும்பியுள்ளது. யாழ்ப்பாணம் உட்பட ஏனைய இடங்களுக்கு 9.45 மணியளவில் மின்சார வழங்கல் சீரடைந்தது. (எ)

## 19இற்கு...

தெரிவித்தார்.

19ஆவது திருத்தம் தொடர்பில் தற்போது தொடர்ச்சியாக முன்பின் முரணான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. அரச தரப்புக்குள்ளேயே சிலர் 19ஆவது திருத்தம் நீக்கப்படாது என்றும், சிலர் பகுதி அளவில் நீக்கப்படும் என்றும் கருத்துத் தெரிவித்திருந்தனர். இந்த நிலையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் சமல் ராஜபக்ச.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பை எவரும் விரும்பவில்லை. புதிய அரசமைப்பையே விரும்புகின்றோம். ஜனாதிபதியின் விருப்பமும் அதுவாக்தான் உள்ளது. எனவே புதிய அரசமைப்புக்கான எமது பணிகள் தொடரும். அதற்கு முன்னர் எமது கரத்தை நாம் பலப்படுத்துவோம். நிறைவேற்று அதிகாரத்தையும், ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமான அதிகாரத்தையும் நாம் பலப்படுத்துவோம். அரசமைப்பின் 19ஆவது திருத்தம் தற்கமற்ற ஒன்றாகக் காணப்படுகின்ற படியால் அதனை முழுமையாக நீக்குவோம் என்றார். (ம-22)

## காங்கேசன்...


துறை முகத்தை புனரமைத்து வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ்வாறானதொரு நிலையில் காங்கேசன்துறை துறைமுகத்துக்கான காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குரிய ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிமெந்துக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 28 ஏக்கர், தனியாருக்குச் சொந்தமான 18 ஏக்கர் காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகளே விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஒ,5)

## 5 ரூபாய் மருத்துவர் திருவேங்கடம் காலமானார்

சென்னை, ஓக.18
சென்னையில் 5 ரூபாய்க்கு (இந்திய ரூபாயில்) வைத்தியம் செய்து வந்த பிரபல வைத்தியர் திருவேங்கடம் மாரடைப்பால் காலமானார். அவரது இழப்பு, அப்பகுதி மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. சென்னை, அயனாவரம், கெல்லீஸ் பகுதியை சேர்ந்தவர், திருவேங்கடம், 70, மருத்துவரான இவர், வியாசர்பாடி, கல்யாணபுரம் பகுதி மக்களுக்கு இலவச வைத்திய சேவை செய்து வந்தார். சேவை நாடி வருபவர்களில், விரும்பிக் கொடுப்பவர்களிடம், ஆரம்பத்தில் 2 ரூபாயும் உயர்ந்தபட்சமாக 5 ரூபாயும், மருத்துவ கட்டணமாக அறவிட்டு வந்தார். கடந்த, 40 ஆண்டு காலமாக, மருத்துவ சேவை புரிந்த அவர் 13ஆம் திகதி மாரடைப்பு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார். (ரி1)



# கொரோனாவில் சிக்காத 14 நாடுகள்!

**உலகிலுள்ள 14 நாடுகளில் இதுவரை கொரோனாத் தொற்று பதிவாக வில்லை.**



சீனாவின் வூகான் நகரில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஆரம்பித்த கொரோனாத் தொற்று பின்னர் அந்த நாடு முழுவதும் பரவியது. அதைத் தொடர்ந்து உலகம் முழுவதும் பரவியுள்ளது. முழுவதுக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்த முடியாமல் மருத்துவ வளர்ச்சியின் உச்சத்தில் இருக்கும் வல்லரசு நாடுகள் கூட திணறி வருகின்றன.
இதுவரை உலகிலுள்ள சுமார் 188 நாடுகளில் கொரோனத் தொற்றுப் பதிவாகியுள்ளது. உலக அளவில் கொரோனாப் பாதிப்புக்குள்ளானோர் எண்ணிக்கை 2.18 கோடியைத் தாண்டியுள்ளது. கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 7.72 லட்சத்தைக் கடந்துள்ளது. இந்நிலையில், உலகில் 10ற்கும் மேற்பட்ட நாடுகளில் இதுவரை கொரோனாத் தொற்று பதிவாகவில்லை. அவையாவன: மத்திய பசிபிக் கடலில் அமைந்துள்ள தீவான கிரிபாஸ், மேற்கு பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள மார்சல் தீவுகள், மைக்குரோனீசியா, நவூரு, வட கொரியா, பலாவுக் குடியரசு, தென் பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள சமோவா தீவு, சொலமன் தீவுகள், தொங்கா இராச்சியம், மத்திய ஆசியாவில் உள்ள துருக்மெனிஸ்தான், துவாலு தீவு மற்றும் வனுவாட்டு குடியரசு ஆகிய நாடுகள் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து தப்பியுள்ளன. (ரி1)



## பிற்போடப்பட்டது நியூஸிலாந்து பொதுத்தேர்தல்

வெலிங்டன், ஓக.18
நியூஸிலாந்தில் பொதுத்தேர்தல் பிற்போடப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. பிற்போடப்பட்ட தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் 17 ஆம் திகதி நடத்தப்படும் என அந்நாட்டின் பிரதமர் ஜெஸிந்தா ஏர்டன் தெரிவித்துள்ளார். நியூஸிலாந்தில் செப்டெம்பர் மாதம் 19 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்துவதற்கு திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. முன்னதாக , கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக நாடாளுமன்றத்தைக் கலைக்கும் தீர்மானம் பிற்போடப்பட்டுள்ளது என அந்நாட்டு பிரதமர் ஜெசிந்தா ஏர்டன் கடந்த வாரம் அறிவித்திருந்தார்.
அதனைத் தொடர்ந்து எதிர்வரும் ஒக்டோபர் 17 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என அந்நாட்டின் பிரதமர் ஜெஸிந்தா ஏர்டன் தெரிவித்துள்ளார். அந்நாட்டின் முக்கிய எதிர்க்கட்சியும் தேர்தலைப் பிற்போடுமாறு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
இதனிடையே 102 நாள்களின் பின்னர் கொரோனாத் தொற்றுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து 49 பேர் தொற்றுக்குள்ளானமை உறுதி செய்யப்பட்டிருந்தது. (ரி1)

## பிரணாப் முகர்ஜி தொடர்ந்தும் கவலைக்கிடம்

புதுடில்லி,ஓக.18
இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் உடல்நிலையில் எந்தவித முன்னேற்றமும் இல்லை என இராணுவ வைத்தியசாலை திங்கட்கிழமை தகவல் தெரிவித்துள்ளது. பிரணாப் முகர்ஜி உடல்நலக்குறைவு காரணமாக டில்லியிலுள்ள இராணுவ வைத்தியசாலையில் கடந்த திங்கட்கிழமை அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மூளையில் இரத்தக் கட்டியை அகற்றும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதை அடுத்து, அவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. தொடர்ந்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் திடீரென் உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்டு கோமா நிலைக்குச் சென்றார். இந்நிலையில் நேற்றுக் காலை இரா ணுவ வைத்தியசாலை வெளியிட்டுள்ள தகவலில், பிரணாப் முகர்ஜியின் உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லை என்றும் அவருக்கு செயற்கை சுவாசக் கருவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)



## எடையை அளக்கக் கோரி சிக்கலில் மாட்டிய உணவகம் வாடிக்கையாளரிடம் மன்னிப்பு கோரியது

பீஜிங், ஓக.18
மத்திய சீனாவில் உள்ள சாங்சா நகரில் அமைந்திருக்கும் மாட்டிறைச்சி உணவகம் ஒன்று தங்கள் வாடிக்கையாளர்கள் உணவுகளை கேட்டு வாங்க முன்பு தங்களின் உடல் எடையை அளவிடுமாரு அறிவுறுத்தப்பட்டதற்கு மன்னிப்பு கோரியுள்ளது.
சீனாவில் உணவை வீணாக்குவது எதிரான பிரசாரம் தேசிய அளவில் தொடங்கப்பட்ட பின்பு அந்த உணவகத்தின் நுழைவாயிலில் உடல் எடையை பரிசோதிக்கும் இரு கருவிகள் நிறு வப்பட்டன. உடல் எடையை அளவிட்ட பின்பு அங்கு இருந்த செயலியில் அவர்களின் உடல் எடை குறித்த விவரங்களைப் பதிவிடுமாறு அறிவுறுத்தப்பட்டது. அந்தந்த நபர்களின் உடல் எடைக்கு ஏற்ற உணவுகளை, அந்த செயலி பரிந்துரைக்கும். உணவை வீணாக்காமல் தங்களுக்கு ஏற்ற உணவுகளை மட்டுமே வாடிக்கையாளர்கள் உண்பதை ஊக்குவிக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என அந்த உணவகம் தெரிவித்துள்ளது. எனினும், இந்த நடவடிக்கை வாடிக்கையாளர்களை அவமானப்படுத்தும் வகையிலான செயல் என்று சீன சமூக ஊடகங்களில் கடும் விமர்சனம் முன்வைக்கப் பட்டது. இந்த உணவகத்துக்கு எதிராக சுமார் மூன்று கோடி ஹேஷ்டேகுகள் சீன சமூக ஊடகங்களில் பதிவிடப்பட்டன. இதன்பின்பு அந்த உணவகம் மன்னிப்பு கோரியுள்ளது. (ரி1)



## ஆர்ஜென்டீனா மெக்சிக்கோவின் கொரோனாத்த டுப்பூசி 2021இல்

ஆர்ஜென்டீனா மற்றும் மெக்சிக்கோ ஆகிய நாடுகள் கூட்டாக இணைந்து தயாரித்துள்ள கொரோனா வைரஸிற்கு எதிரான தடுப்பூசி அடுத்தாண்டு முதல் காலாண்டில் சந்தைக்கு விநியோகிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தடுப்பூசி தற்போது பரிசோதனை மட்டத்தில் காணப்படுகிறது எனவும் 2 ஆம் கட்டத்தில் அதனை தொற்றாளர்களுக்கு செலுத்தி பரீட்சிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. லத்தீன் அமெரிக்க வலய நாடுகளுக்காக 400 மில்லியன் அலகு தடுப்பூசியை உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது எனவும் அலகொன்றின் விலை 4 டொலர்கள் வரை நிர்ணயிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்க ப்படுகின்றது. (ரி1)

தரம் 5 மாணவர்களுக்கு!
**ஆசிரியர் திரு.வே. அன்பழகன்** அவர்களின் தொகுப்பில் தமிழ்மொழி சார்ந்த எதிர்பார்க்கை வினாக்கள் உள்ளடங்கிய செயலட்டை வடிவிலான பயிற்சிநூல் வெளிவந்துள்ளது.
பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
(இந் நூலினை பெற விரும்பும் பாடசாலைகள், தனியார் நிலையங்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.)
அன்பொளி கல்வியகம்.
இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.